செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

	பக்கம்
ஆவியுலகத் தொடர்பாளர் வழி காணுவுலக வாழ்நர் மறைத்திரு மறைமலையடிகளார் வழங்கிய கருத்துரை	—௩௨௧
தமிழ்நாட்டு அரசுச் செந்தமிழ் அகரமுதலித் திட்டமும் விளக்கமும்	—௩௩௩
ஆப்பிரிக்கச் சுற்றுலா	—௩௪௧
அஃறிணை ஊமனும் கூகைக் கோழியும்	—௩௫௨
மருந்துப் பெயர் இலக்கியங்கள்	—௩௫௭
பேரா. இ. எஸ். வரதராஜையர் வைர விழாவில் வாழ்த்து	—௩௬௨
ஆட்சி மொழித் துணுக்குகள்	—௩௬௪
பாப்பரணை, பாப்பார அரணையா?	—௩௬௬
திரு. சை. வே. சிட்டிபாபு... துணைவேந்தரானார்	—௩௬௯
செய்திகளும் குறிப்புகளும்	—௩௭௨

சிலம்பு-௪௯] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௬ மாசி (March. '75) [பரல் - ௭

‘செந்தமிழ்ச் செல்வி’

கழக வழி வெளிவந்துள்ள இளைஞர் இலக்கிய நூல்கள்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சக	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௫, மாசி மார்ச்சு 1975	பரல் எ

ஆவியுலகத் தொடர்பாளர்வழிக் காணுவுலக வாழநர் மறைத்திரு மறைமலையடிகளார் வழங்கிய கருத்துரை

[முன் பரல் சு, பக்கம் உஎகூ இன் தொடர்ச்சி]

என் இளைய மருகரும் இளைய மகளுமாகிய புதுமண மக்களோடு யானும் என் மனைவியும் 3—8—1959 இல் திருக் குற்றாலஞ் சென்று தூத்துக்குடியிலுள்ள பெருஞ் செல்வர் சி. வ. நல்லபெருமாள் பிள்ளை அவர்கள் மாளிகையில் தங்கியிருந் தோம். 7—8—59 இல் நெல்லையிலிருந்து ஆவியுலகுத் தொடர்பாளர் திரு இரா ந. குற்றால லிங்கம் பிள்ளை அவர்கள் வந்து எங்களோடு தங்கினர். அன்றிரவு ஆவியுலகு வாழ்நர் மறைத்திரு மறைமலையடிகளார் தமது பெயரிலுள்ள நூல்நிலை யத்தின் நூலகரும் தமக்குப் பேரர் முறையிலுள்ளவருமாகிய திரு இரா. முத்துக்குமாரசாமியிடம் இயக்குநர்வழி உரையாடினர்.

நூலகர் கல்லூரியில் இடைநிலைத் தேர்வில் செகப்பிரியர் நாடகங்களில் வெனிசு வணிகன் (Merchant of Venice) என்ற நாடகத்தைமட்டும் பயின்று பின்பு தமிழில் முதுகலைப் (M. A.) பட்டம் பெற்றனர். அதன்பின் நூலக வியலில் முதனிலைச் சான்றிதழும் (Diploma) பெற்றுப் பிறகு இளநிலைப் பட்டம் (B. Lib) பெற்றுள்ளனர். இயக்குநரோ பள்ளி இறுதித் தேர்வில் ஆங்கிலத்தில் மிகவும் குறைந்த எண் வாங்கியமை யால் தேர்ச்சி பெறவில்லை. அங்ஙனமிருக்கையில் கலைக் களஞ்சியமாக விளங்கிய மறைத்திரு மறைமலையடிகளார் இயக்குநர்வழி நூலகரிடம் செகப்பிரியர் நாடகங்கள் சில

வற்றிலிருந்து சிற்சில குறிப்புக்களையும் சங்க இலக்கியங்களி லிருந்து சிற்சில குறிப்புக்களையும் கூறி விளக்கங் கேட்டது பெருவியப்பினை விளைத்தது. அங்ஙனம் அவர்கள் கேட்டமை நூலகராயிருப்பவர் பலதுறை நூல்களையுங் கற்றுப் பேரறிஞராய் விளங்குதல் வேண்டுமென்ற கருத்தை உணர்த்தியதாகும்.

மறைத்திரு மறைமலையடிகளார் விரும்பி வாழ்த்தியபடி நூலகர் திரு இரா. முத்துக்குமாரசாமி அவர்களின் அறிவாற்றல் களும், பண்பு நலங்களும், நூலகத் தொண்டும் நாளுக்குநாள் பெருகி வளர்ந்து வருதலை ஆவியுலகில் வாழும் அடிகளாரே கண்டு களிப்புறுவர் என்பதில் ஐயமில்லை.

1961 ஆகஃச்டுத் திங்களில் சென்னை இராசாசி மண்டபத் தில் நடைபெற்ற கழகத்தின் 1008 ஆவது நூல்வெளியீட்டு விழாவிலே வெளியிடப்பெற்ற பாராட்டுவிழா நூற்பட்டி (Commemoration Bibliography) யினைத் தொகுப்பதற்கு நூலக வியற்றுறையில் உலகுபுகழ் பெற்ற தாமரைச் செல்வர் டாக்டர் எஸ். ஆர். அரங்க நாதன் அவர்கள் தமக்கு 100 மணி நேரமும் நூலகர்க்கு 1000 மணி நேரமும் ஆயிற்று என்று தமது முன்னுரையில் வியந்து எழுதியுள்ளனர்.

ஹெர்பர்ட் ஸ்பென்சரின் நூல்வகைமை முறையினைப் பின்பற்றிப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, எம்.ஏ அவர்கள் 'நூற் றொகை விளக்கம்' என்ற நூலை நூலகவியலை யாரும் அறியா திருந்த காலத்தில் எழுதி வெளியிட்டனர். அதனைக் கழகம் 190 ஆவது வெளியீடாக வெளியிட்டது டாக்டர் அரங்கநாதன் அவர்கள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்தது. மறைமலை யடிகள் நூல்நிலையத் திறப்பு விழாவிலே கழகத்தின் துணிச் சலைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

மேலே குறிப்பிட்ட 1008 ஆவது நூல் வெளியீட்டு விழா விலே அப்போதைய பள்ளிக் கல்வித்துறை, நூலகத்துறை இயக்குநராக இருந்த தற்போதைய சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மதிப்பிற்குரிய நெ. து சுந்தரவடிவேலு அவர்கள் பாராட்டு விழா நூற்பட்டியினை வெளியிட்டுத் தமிழை வளர்க்க வழிகாட்டியது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்றும், பாராட்டு விழாப் பட்டியினை ஒரே மூச்சில் தாம் படித்து முடித்தேம் என்றும், அஃது அத்தகைய பெருமை வாய்ந்த சீரிய நூல் என்றும் கூறியதோடு அதனைத் தொகுத்த டாக்டர் அரங்கநாதன் அவர்களையும் நூலகரையும் மிகவும் பாராட்டிப் புகழ்ந்து பேசினர்.

வெளிநாடுகளிலிருந்து பல துறைகளில் தமிழைக் கற்பதற்கு வரும் அறிஞர் பெருமக்கள் தமக்கு வேண்டிய நூல்களையும் கட்டுரைகளையும் தொகுத்துக் கொடுத்து வருவதைப் பற்றிய நூலகரின் தனித்திறமையினையும் முகமலர்ச்சியோடு வரவேற்று உதவி புரிவதனையும் பெரிதும் பாராட்டிப் புகழுரை வழங்கியுள்ளனர்.

தமிழ் வழங்கும் பல்கலைக் கழகங்களில் எம்.ஏ., எம்.லிட்., டி.லிட். முதலிய பட்டப் படிப்புகட்கும் மற்றும் ஆராய்ச்சிகட்கும் வேண்டிய நூல்களைத் தொகுத்து வைத்திருப்பதோடு நூலகவியலின்படி அவற்றை வகைமைப்படுத்தி வேண்டுவார்க்கு வேண்டிய நூல்களை எடுத்துக் கொடுத்துவரும் நூலகரின் தொண்டினைப் போற்றுதார் இலர். நூல்களை வகைமைப்படுத்துவது மட்டுமன்றிப், பல துறைகளில் நூல்களை மேலும் மேலும் தொகுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். 1958 இல் மறைத்திரு மறைமலையடிகளாரின் 4,000 நூல்களோடு கழகம் தொகுத்து வைத்திருந்த 6,000 நூல்களையுங் கொண்டே நூல் நிலையம் திறக்கப்பெற்றது. இன்று ஏறக்குறைய 30,000 நூல்கள்வரை உள்ளன. நூலகர் பழைய நூல்களைப் பாதுகாப்பதற்குரிய முறைகளையும் கடைப்பிடித்து வருகின்றனர். படப்பிடிப்பிலும் நன்கு பயிற்சி பெற்றிருக்கிறார். அதனால் புலவர் பெருமக்களின் படங்களைத் தொகுத்திருப்பதோடு திருக்கோயில்கள், சிற்பங்கள் முதலியவற்றையும் படம் பிடித்துப் பாதுகாப்புடன் பேணி வைத்திருக்கின்றனர்.

செக் நாட்டிலிருந்து 3—5—1974 இல் வீரபாண்டியன் கட்டபொம்மனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுப்பதற்கு வந்திருந்த திரு ஜான் பிலிப்சுகீ என்பவர் எங்கெங்கோ அலைந்து திரிந்தும் கிடைக்கப் பெறுமல் மறைமலையடிகள் நூல் நிலையத்திலேதான் தாம் விரும்பிய குறிப்புக்கள் அனைத்துங் கிடைக்கப் பெற்றன என்று பாராட்டி எழுதிய குறிப்பினை அடியிற் காண்க.

This library bearing the name of the great revivalist Maraimalai Adigal is not simply another public library but a real cultural centre, a veritable treasure-house for any student of the great history and culture of Tamilnadu. To have such a nice collection of rare and valuable books under one roof would certainly be enough to admire, but this library is offering something more than simply books and periodicals. The atmosphere of devotion to the cause of spreading the Tamil learning is inseparable from the invaluable collection of the library, both stimulatiug and soothing to the soul, and it is to a large degree thanks to the devoted Librarian, Mr. Muthu

kumaraswamy and his staff that no student, no matter what aspect of Tamil studies he might be interested in, would find his visit to this temple of learning disappointing.

I was very pleased to find an imposing array of books dealing with the subject of my research, viz. Poligar wars in the History and Lore of Tamilnad, which I was unable to get anywhere else, including the National Library, Calcutta, and which have long been out of print.

Jan Filipsky

3-5-74 Oriental Institute

Lazenska, Praha, Czechoslovakia.

மேலும் நல்ல கட்டுரைகள் அடங்கிய மலர்களேயும், பல பழைய நாள், கிழமை, திங்கள் இதழ்களேயும் தொகுத்து வைத்திருப்பதனுல் அவை ஆராய்ச்சியாளர்கட்குப் பெரிதும் பயன் படுகின்றன. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினர்க்கும் இந்நூல் நிலேயம் நன்கு பயன்படுகின்றதென அதன் இயக்குநரவர்களும் பாராட்டுகின்றனர்.

கழகம் நடத்தும் பல மாநாடுகளேயும், நூல் வெளியீட்டு விழாக்களேயும், சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்களேயும் நடத்துவதற்கு நூலகர் செய்துவரும் உதவி பெரிதும் போற்றுதற்குரியது.

பழைய ஆங்கில இதழ்களில் மேலே நாட்டறிஞர்களும் தமிழ் நாட்டறிஞர்களும் தமிழ், வரலாறு, மெய்ப்பொருள், கலே முதலியவைபற்றி எழுதிய கட்டுரைகளேப் படி எடுத்து வகைமைப் படுத்தி வைத்திருப்பது ஆராய்ச்சியாளர்கட்கு மிகவும் பயன்படுகின்றது. கழகம் புதிய புதிய துறைகளில் நூல்கள் வெளியிடுவதற்கும் நூலகர் புரிந்துவரும் உதவி நன்கு பாராட்டுதற்குரியதாகும்.

மற்ற நூல்நிலேயங்களில் பணியாற்றும் நூலகர்களேப் போல் குறிப்பிட்ட காலவரையறையில் இவர் பணியாற்றுவாராஞல் மறைமலேயடிகள் நூல்நிலேயம் இத்துணேயளவு வளர்ச்சி பெற்றிருக்காது என்பது வெள்ளிடைமலேயாகும்.

அடுத்துத் துன்பியல் நிகழ்வு ஒன்றினே விளக்குகின்றேன்.

என் பெருமதிப்புக்குரிய உயர் அலுவலர் ஒருவருடைய ஒப்பற்ற ஒரே மகன் சிறுவனுயிருக்கும்போதே துடிதுடிப்புடைய அறிவுச் செல்வஞக விளங்கினுன். அவன் திடுமென இறையடி சேர்ந்த செய்தி எனக்கு மட்டுமேயன்றி அவனே நன்கறிந்த தமிழ் மக்கள் அனேவருக்கும் ஆற்ருெணுத் துன்பம் விளேத்தது.

எனவே, யான் ஆவியுலகத் தொடர்பாளர் அவர்கட்குக் கடிதம் எழுதினேன். அச்சிறுவனிடம் அவனுடைய தாய் தந்தையர்க்கு ஆறுதலுரையும் மறைத்திரு மறைமலையடிகளாரிடம் இரங்கலுரையும் எழுதி வாங்கி அனுப்பும்படி எழுதினேன்.

அச்சிறுவனிடமிருந்து வந்த ஆறுதலுரையினையும் அச்சிறுவனுடைய தாய் தந்தையர் இன்னார் என்பதைப் பற்றியும் குறிப்பிட யான் விரும்பவில்லை.

யான் ஆவியுலக இயக்குநர்க்கு எழுதிய கடிதம் வருமாறு

"என் பெருமதிப்பிற்குரிய உயர் அலுவலர் அவர்களுடைய ஒரே ஒப்பற்ற பத்து அகவையுள்ள திருமகன் அண்மைக் காலத்தில் தனது இல்லத்தில் ஊனுடலைக் கழித்து நுண்ணுடலில் ஆவிஉலகு சேர்ந்தனன்.

அவன் இந்த இளம் பருவத்திலேயே அறிவாற்றல் பண்புகள் நிறைந்தவனாகக் காணப்பட்டான். அவனைக் கண்டவர்களும், அவனோடு பழகியவர்களும் அவனிடம் பேரன்பு கொண்டனர். ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனாக விளங்கிய அவன் பிரிவு அவன் தாய் தந்தையர்கட்கு மட்டுமல்லாமல், உற்றார் உறவினர்க்கும் மற்றும் அன்பர்கட்கும் பெருந் துன்பத்தைத் தருகின்றது.

ஆதலால் அடிகளார்வழி ஆவியுலகிற்கு வந்திருக்கும் அச்செல்வனை அழைப்பித்து அவன்வழியே ஆறுதலுரை வாங்கி எனக்கு அனுப்புவீர்களானால் அது காலத்தினாற் செய்த உதவியாகும். அச்செல்வன்வழி ஆறுதலுரை வாங்கி அனுப்புதற்கு ஆணை கிடைக்கப் பெறாவிடில் மறைத்திரு மறைமலையடிகளார் அவர்களே ஓர் ஆறுதலுரையினை எழுதி அனுப்பினால் அதனை யான் பெரும்பேறாகக் கருதுவேன்.

13—9—1959 இல் நடைபெறும் நூல்நிலையத்தின் முதலாண்டு நிறைவு விழாவுக்கு முன் கடிதப்படி *வாழ்த்துரைகள் வாங்கி அனுப்புவீர்களென்று நம்புகிறேன். அடிகளார் முதலியோர் விழாவன்று இவண் வந்து விழாவிற் கலந்து கொள்ளும்படி இறைஞ்சி வேண்டிக் கொள்கிறேன்."

மறைத்திரு மறைமலையடிகளார் இயக்குநர்வழி இயக்கி எழுதியனுப்பிய இரங்கலுரை வருமாறு.

ஓம் சிவாயநம

"என்னைத் தெரிந்திருப்பீர், யாமாகிய மறைமலையடிகள் எவரெனத் தெரிந்திருந்தாலும் இன்று தாம் எம்மைக் காண

---

*பெரும்புலவர் எண்மரிடமிருந்து வாழ்த்துரைகள் வந்தன. பின் இதழில் விளக்கப்படும்.

ஒண்ணாத நிலையிலிருக்கின்றேம். தமது இல்லில் நடந்த தீச்செயல் துன்பியல் குறித்து நம் அன்பர் சைவசித்தாந்தக் கழகப் பொறுப்பாளையர் திரு. சுப்பையாபிள்ளை அவர்கள், எம் இயக்குநருக்கு வரைந்த கடிதத்தில் குறித்திருக்கின்றனர். மேலும் தம் அருந்தவச் செல்வனிடமிருந்து ஆறுதலுரை வாங்கி அனுப்ப வேண்டுமாறும், இல்லையேல் யாமாகிய மறைமலையடிகளாரிடமிருந்தாவது தமக்குத் தேறுதலுரை வரையச் செய்வான் வேண்டியும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நண்பரே திருவருட்டிறனெனக் கொளல் நன்றென யாமும் நும்மிடம் வேண்டுகின்றனம். உலகத்துத் தோன்றிய அன்றே நமக்கென ஒரு காலவரை அறுக்கப்பட்டே வந்து தோன்றுகின்றேம் என்பதனைத் தாம் ஒப்புவீர்.

இருப்பினும் அன்பரே! எவர் எது எடுத்தியம்பினாலும் தம் மனத்தின்கண் உறையும் பாசமாம் மக்கட் பாசத்தைக் களைந்தெறிதல் என்பது சிறிது கடினமே. இருப்பினும் தம்போன்ற அறிஞர் தம்மைச் சீர் படுத்திக்கொள்ளவும் முயன்றால் முடியாததொன்றில்லை. எங்ஙனே? யாமாகிய மறைமலை உரைக்கின்றேம். திருவருட் சோதனை என்று இயம்பாது வேறென்னையென விரும்பி உரைத்தல் இயலும். சீலரே, சிந்தனையைச் சிதற விடாதீர். திருவருட் செயலே என்ற சிந்தனை நும் மனத்துள் எழுந்து, நும் வீட்டுச் செல்விக்கும் ஆறுதலுரை நீரே உரைத்தல் நலம். நீர் எண்ணலாம், எவ்விதம் அவள் முகத்து நோக்குவேம் என? "என் செய்யலாம், கலங்காதிரு, நமக்கு அவன் விதித்ததை மாற்ற இயலுமோ, அவன் ஆணைக்கு எவரும் விலக்கல்லர். நம்மை விட எத்தனையோ பெற்றோர்கள் இன்னல் அனுபவித்தலை நீ காணவில்லையா? பெற்ற மனத்தின் கொதிப்புத் தாங்கவொணாததே. எல்லாம் அவன் செயல் என்று தேறு" எனத் தாம் உரைத்துத் தம் இன்சொலால் அன்னையைத் தேற்றுவான் வேண்டி நும்மிடம் விரும்புகின்றேம். நுமக்கு யாமாகிய மறைமலை ஒரு சிறு ஆறுதலுரை அளிக்க விரும்புகின்றேம். கருத்துட் செலுத்தி ஆய்வு காணல் நலனென வேண்டுகின்றேம்.

நண்பரே, தாமும் நாமும் நும் உலகுவாழ் மக்களும், விதியென்ற ஒன்றிருந்து செயல்படச் செய்கிறதென எண்ணுவோம். அங்ஙனே விதியென ஒன்றினை மதியெனும் ஒன்றினால் மாற்றுதல் இயலுமெனவும் கேட்டிருக்கின்றேம்.

அவ்விதம் அறிந்திருப்பினும் அதை அறிந்து செயல்பட எண்ணினும் நம்மையே அறியாததொரு புதுமை அங்குத் தோன்றி, நம்மை மீறிச் செயல்படுகின்ற தென்பதனையும் எவரும் மறுக்கமுடியாது அன்பரே, அதனையே திருவள்ளுவர் தம் பொய்யாமொழியிலே 'ஊழியல்' என்பதில்,

"ஊழ் என்ற தலைப்பின்கீழ்க் கொடுத்திருக்கும் ஒன்றினை இங்கு எடுத்துச் சாற்றல் திறனெனத் தெரிகின்றது; தருகின்றேம் தருணத்தில்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

கண்டீரா கருத்தை,

ஊழைவிட மிகுவலியுடையவை வேறெவை? இல்லை இல்லை இல்லை. நம் மதிகொண்டு ஊழ் என்ற ஒன்றினை ஓட்டுதல் எங்ஙனே என உன்னினும் அங்கும் தோன்றும், முந்தும், முன் வந்து நிற்கும், ஊழ் என என்றுரைக்கும் ஒன்று. நும்மிடம் இதை நேரில் உரைக்கும் வாய்ப்பு எமக்கில்லையே என்செய, கலக்கம் விட்டொழியும் அன்பரே, நாம் தவத்தால் பெறலாம்; வளர்க்கலாம்; கல்வியைப் புகட்டலாம்; அவன் விதியை அளக்க நாம் யார்? அறிவிற் சிறந்தவரே, விதியெனக் கொளாது வேறென்னே எனக் கொளல் சாலும்? இன்னும் உரைக்கின்றேம். திருவள்ளுவரின் கூற்றையே நோக்கும்.

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்"

சிந்தியும் செல்வரே! கருத்தை ஊன்றி. நல்வினை விளையுங்கால் நல்லவையெனக் கருத்திற்கொண்டு மகிழ்வெய்தல் போன்று, தீவினை விளையும்போதும் துன்பமெனக் கொளல் ஏனோ? என எடுத்துரைக்கின்றார். அதுபோல் தாமும் திருவருள் நம்மை மகிழ்விப்பான் உளங்கொண்டு அளித்த தோர் உயிரினை எடுத்தது அவன் செயலேயென உன்னுதல் நலனெனத் தாம் கொளல் நன்றென விரும்பி உரைக்க இயலுமே தவிர வேறென்செய்ய இயலும்? இருப்பினும் அன்பரே, இன்னும் ஒன்றினை மொழிகின்றனம். மேலும் இவ்வுலகு எத்தன்மையதெனக் காட்டுகின்றார் திருக்குறள் வரைந்த பெருமான். கீழே தருகின்றேம்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு."

ஆயும் அறிஞரே! நேற்றிருந்த பெருமகனை இன்று கண்டிலேம். எவர் நினைந்தார்? அவன் இங்ஙனே இவ்வுலகு

விட்டுச் செல்வானென? நேற்று என்னுடன் வெகுநேரம் அளவளாவினன். இன்று காலையில் இறந்தனன் என்ற செய்தி செவியில் விழுகின்றதே என உரைப்பதுவும் தமக்குத் தெரிந்ததே. என்ன உலகம்? என்ன கடவுள்? அக் குடும்பம் அவனையே நம்பியல்லவோ வாழ்ந்தது. நற்குணம் வாய்ந் தவன். எவர்க்கும் நண்பன் என்றெல்லாம் உரைக்கும் பெருமையாகக் கொண்டே இவ்வுலகம் வாழ்கின்றது கண்டீரா? இன்னும் உரைக்கின்றேம். பொய்யாமொழியையே புகலு கின்றேம், தருகின்றேம், நோக்குக......

> "நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
> வாளது உணர்வார்ப் பெறின்."

உலகத்து வாழ்க்கையை உன்னி ஆராய்ந்தால், அத்தன் மையை உணர்வாரைப் பெற்ருல், நாள் என்பது ஒரு காலக் கோல்போல் அளவினைக் காட்டி உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாக அமைந்துள்ளதென்பதனை அறிய லாம். அதுபோற்ருன் இங்கும் உமது அருந்தவச் செல்வனும் இன்னுயிர் இளையோனின வாழ்நாளும் நாளென்னும் வாளால் அறுக்கப்பட்டு அவன் வந்து உதித்தகாலை முடிவுறவே விண் ணுலகு எய்தினன் என மனத்துட் கொள்ளும். வருத்தம் ஒழிமின்! இது இயற்கையென எண்ணும் நூற்சான்று காட்டுதல் எளிது. அவரவர் அத்துன்பத்தை மக்கட் பற்றினை அறிந்தால் அல்லவா விளங்குமென மனத்துட் கொள்ளலாம். உலகத் துக்கண் தோன்றிய ஒவ்வொருவருக்கும் இது நிகழ்தல் இயற்கையே. தாமும் அதற்கு விலக்கில்லை. எதெது காலத்து எதெது செயல்படவேண்டுமென்ற நியதி இருக்கின்றதோ அது செயல்பட்டே தீரும், அவன் அருளால். கவலை விடுதல் நன்றென நுவல்கின்றேம்.

இன்னும் சிறிது உரைக்கின்றேம் செல்வரே! சிந்தையில் தனியொரு கருத்தாய்க் கொளல் நன்று. பட்டினத்தடிகள் உரைக்கின்ருர்; தருகின்றேம். கருத்துட் கொள்ளும்.

> "எல்லாம் அறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
> வல்லான் அறிந்துளன் என்றுண ராது மதிமயங்கிச்
> சொல்லான் மலைந்துறு சூழ்விதி யின்படி துக்கித்துப்பின்
> எல்லாஞ் சிவன்செய லேயென்பர் காண்கச்சி யேகம்பனே."

கருத்தும் தருகின்றேம். எல்லா வினைகளும் செவியுற்றும் தானே கண்டும், கற்றும் எமக்கென உளதை எம்பெருங் கூத்தன் அறிந்தே அவனுற் செயற்படுகின்றன. உணராது இன்னல் வந்துள்ளகாலைத் தன் மதி இழந்தும், பிறர் கூறும்

மொழியினுல் மலேத்தும், தம்மை வந்தடைந்த ஊழின்படி துக்கம் அனுபவித்துச் சின்னுட்கள் சென்றபின்னே சிவத்தின் செயலெனத் தேறுவார்களெனக் கச்சிநகர் ஏகம்பனிடம் உரைக்கின்ருர். கண்டீரா ? தானே அனுபவித்ததின் பயனே ஆண்டவனிடம் அறைகின்ருர். இதுபோல் அன்பரே! தாமும் அவன் செயலால் நிகழ்ந்ததெனத் தம் மனத்துட்கொண்ட வருத்தத்தினே அவனிடமே எடுத்துரைத்துத் தம்மை அவ் வருத்தத்தினின்று விடுபட அவனேயே வணங்கும். காலப் போக்கில் அகன்று விடும். யாமாகிய மறைமலே தம்போன்ற அறிஞர்களிடம் இதற்குமேல் உரைத்தலென்பது பொருந்தா தெனக் காண்கின்றேம். இருப்பினும் ஒன்றினேயும் குறிக்க விழைகின்றேம். பட்டினத்தடிகளின் நல்லுரையைத் தருகின்றேம்.

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமும்நட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.

இதில் ஒன்றையே சிந்தியும், தெய்வம் ஒன்று உண்டு என்று எண்ணுதல், இதற்குள்தான் கருத்தடங்கியிருக்கிறது. முதலில் மனமே யான் எடுத்துரைப்பதெல்லாம் ஒன்றென்றிரு. நம்மைச் சிருட்டித்து இயக்குபவனுய தனிப் பரம்பொருள் ஒன்று. பின் தெய்வம் உண்டென்றிரு; இதில்தான் ஊழ் என ஒன்றும் அவனுல் இயக்கப்பெற்றே வகுக்கப்பட்டதெனவும் அறி. (மற்றவையெல்லாந்தாம் செயற்பட்டு வருகின்றீர்). இவ்விதம் நற்சிந்தையின்கண் போந்து பணியாற்றுதல் என்ற கடனே தலேயாயதென எண்ணும். (தமக்கும் இங்ஙனே வந்துதித்தமை வருந்தற்பாலதே) மனமே நீ செய்யவேண்டிய நற்பணியினே நடுவுநிலே நீங்காது எவ்விடர் நமக்கு வந்து உதித்தாலும் இறை செயலே என எண்ணியும் செயல்படு என்று உரைக்கின்ருர். அதுபோல் அன்பரே எதுவும் நமக் கிட்டபடி என்று அறிவிற் சிறந்தவராய தாம் உன்னுதல் நலமென யாம் வேண்டித் தம்பாலுள்ள வருத்தத்தை மாற்றுதல் நலமென மேலும் வேண்டுகின்றனம். இன்னும் ஒன்றினேயும் எடுத்துரைக்கின்றேம்.

எம் இயக்குநர், இயக்குநர் என்பவர் இக்கடிதம் எம்மால் இயக்கப்பட்டு வரைகின்றவர். தம் ஊர்விட்டுத் திருநெல்வேலி வந்து தங்கியபோது இரண்டு ஆண்மக்களே ஒரே நாளில்

இழந்தாரென்பதையும் அறிவிக்கின்றேம். செல்வன் ஒருவன் ஒத்த குணம் அமைந்தவன்; அகவை ஏழு. இன்னெருவன் ஆண் அழகன்; அகவை நான்கு. இவ்விரு கண்களையும் ஒரே நாளில் இழந்தான். ஒருவனைக் கொண்டு இடுகாட்டில் இட்டு வந்தவன்; அதே காலுடன் மற்றவனையும் கொண்டு அங்கிட்டனன். அன்பரே இதை எதற்காக உரைக்கின்றேம் எனின், தமக்கு மட்டிலும் அல்ல, தம்மைவிட இன்னல் அனுபவிக்கும் தாய்தந்தையர்களும் உண்டென்று காட்டவே. இருப்பினும் அன்பரே இது மட்டுமன்றி எம் இயக்குநர் நான்கு அகவைகளிலே இன்னும் இரண்டு ஆண்மக்களையும் இழந்தே இருக்கின்றனன் என்பதையும் மீண்டும் குறிக்கின்றேம். இவையெல்லாம் யாம் எடுத்துரைக்காதே அறிந்திருப்பீர், உலக வழக்கெல்லாம்.

உரைக்கின்றேம்; உறுதியுடன் இரும். நும் செல்வன் எம் உலகச் செல்வனுக இங்கு அமர்ந்திருக்கின்றனன். கலக்கம் விட்டொழியும். ஆண்டவன் அருள்கொண்டு அமர்ந்திருக்கின்றனன். எம் குழுவிலே இன்னும் சில நாட்களுக்குள் நும் மனவருத்தத்தை மாற்றும் ஓர் வாய்ப்பினை வழங்க யாம் எம் இறைக்கூத்தனை வணங்குவேம் என்பதனை கருத்துட் கொள்ளும். தாம் எல்லா இன்னல்களையும் விட்டொழித்து அவன் செயலென உன்னும். அம்மை அம்பலவாணன் அருள் புரிவான். தம் செல்வன் எம் பக்கலிலே அமர்ந்திருக்கின்றுன். அவன் கொண்ட கோலத்தினை அவனியில் அவதரித்து முடித்துவிட்டதின் பின்னரே அவனருளாலே இங்குப் போந்தனன் என எண்ணுமாறு வேண்டி விடை கொள்ளுகின்றனம். வருத்தம்விட்டொழியும்.

தான் பெற்றெடுத்து வளர்த்த அறிவுச் செல்வன் பிரிவைப் பற்றி அவனுடைய தாய் தந்தையர் எத்துணை வருந்தியிருப்பர் என்பதை விளக்கும்பொருட்டே திரு. வி. க. அவர்கள் தம் மனைவி மக்களை இழந்து தம் தமையன் திரு. வி. உலகநாத முதலியார் குடும்பத்திலே வாழ்ந்து வருகையில் தம் தமையனுரின் ஒரே மைந்தன் பாலசுப்பிரமணியன் பிரிவாற்ருமை குறித்து 'ஒரு குலத்துக்கு ஒரு மைந்தன்' என்ற தலைப்பில் 27—10—1928 நவசக்தி இதழில் எழுதிய தலைப்பினை அப்போது படிக்க எடுத்தேன். சில வரிகளைப் படிக்கும்போதே என் கண்களில் நீர் மல்கவும் எனது நா தழுதழுக்கவும் படிக்க முடியாமல் நிறுத்திவிட்டேன். அதனை இங்கே வெளியிடுவது பொருத்தமெனக் கருதி வெளியிடுகின்றேன்.

நவசக்தி (17—10—1928)

ஒரு குலத்துக் கொருமைந்தன்

(திரு. வி. க. எழுதியது)

"பலப்பல துன்பச் சூழலைக் கண்ட "நவசக்தி" எட்டாம் ஆண்டு தன் முடிவில் "நவசக்தி" அகத்திலேயே ஒருபெருந் துன்ப மனையைக் கிளத்திச் செல்கிறது. கடந்தவாரம் தமிழ்நாட்டில் "நவசக்தி"யின் சிலம்பு ஒலியாதொழிந்ததை அன்பர்கள் கவனித்திருக்கலாம். அக் காரணத்தை வருத்தத்துடன் குறிக்கிறேன்.

"நவசக்தி" காரிய நிருவாகரும், என் அருமைத் தமயனுருமாகிய திரு. வி. உலகநாத முதலியார்க்கு இன்புதல்வனாய்ப் பிறந்த எங்கள் குலத்துக்கு ஒரு மைந்தனாய்ப் பின்னாளில் "நவசக்தியை" அன்புட னேற்றுத் தொண்டாற்றவல்லனாய், அதற்குரிய கல்வி அறிவு திறமை முதலியன வாய்க்கப்பெற்றவனாய், எனக்கினியனாய்ச் செங்குருத்தென வளர்ந்து வந்த என் கண்மணி—பாலசுப்பிரமணியன் சென்ற செவ்வாய்க் கிழமை இரவு 11 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்ததை நேயர்கட்கு ஆருத்துயருடன் தெரிவித்துக்கொள்கிறேன். இற்றைக்குப் பத்தாண்டுக்கு முன்னர் என்னுடைய மனைவி மக்களை அழைத்து என்னைத் தன்னந் தனியனாக்கிய ஆண்டவன், தமையன் வழிப்போந்து, எனக்குப் பல வழியிலும் ஆறுதலளித்து வந்த ஒரு மைந்தனையும் இப்பொழுது அழைத் துக்கொண்டான். எச்செல்வமும் பெரு வறியேனுக்குத் தமையன்வழிக் கிடைத்த சேய்ச் செல்வமும் போயிற்று. எளியேன் வாழ்வை ஆண்டவன் திருவுள்ளப்படி நடாத்துவானாக.

எங்கள் குலத்துக்கு ஒரு மைந்தனாய், ஒரு மணியாய், அமிழ்தாய் விளங்கிய பாலசுப்பிரமணியன் 1905-ஆம் ஆண்டு இம்மண்ணிற் பிறந்து, 1928-ஆம் ஆண்டு மறைந்தான். அவன் சென்னை வெஸ்லி கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்த மாணுக்கன். இடையிடையே அவன் நோய்வாய்ப்படாதிருப்பின் அவன் எப் பொழுதோ கல்லூரிப் படிப்பை முடித்திருப்பான். அவனை இடை யிடையே நோய் தாக்கித் தாக்கி அவனது பள்ளிவாழ்விற்குக் கேடு சூழ்ந்து வந்தது. நோய் காரணமாகச் சில வேளைகளில் நாள் கணக் கிலும், சில வேளைகளில் திங்கள் கணக்கிலும், சில வேளைகளில் ஆண்டுக் கணக்கிலும் அவன் பள்ளியினின்றும் நிற்க நேர்ந்ததுண்டு. நோய் சிறிது ஒதுங்கினதும் மீண்டும் பள்ளி நோக்குவது அவனது வழக்கம். பள்ளியை விடுத்து முற்றும் விலகுமாறு தாய் தடுப்பினும் தந்தை தடுப்பினும் மற்றெவர் தடுப்பினும் மைந்தன் கேட்பதில்லை. அவன் கல்விமீது கொண்டிருந்த பித்துக்கோர் அளவில்லை. படுக்கையிலும் ஏதாவதொன்றை அவன் படித்துக்கொண்டிருப்பான். நோயுடைய மைந்தன் படிப்பு வேட்கை உடலுக்கு ஊறு செய்யுமென்னும் இரக்கத்தால் என் தமையனார் அவனை அடிக்கடி கடிவதுமுண்டு.

பாலசுப்பிரமணியன் பள்ளிப் படிப்புடன் மட்டும் நிற்பதில்லை. அவன் பந்தாட்டத்தில் பேர்பெற்றவன். அவ்வாட்டத்துக்கென ஒரு சிறு கழகத்தையும் ஒழுங்குபெற அவன் நடாத்தி வந்தான். அவன் ஓய்ந்த வேளையில் "நவசக்தி" தொழிற்சாலையுள் நுழைந்து தொழிலாள ருடன் கலந்து, ஆங்குள்ள தொழின்முறைகளைப் பயில்வன். அச்சுக்கூட வேலைகளில் பல அவன் பயின்றிருந்தான். பசுஞ் செடிகொடிகளை வைத்து வளர்ப்பதில் அவனுக்குப் பெருவிருப்பம். செடி கொடிகளுக்கு அவன் செய்த தொண்டு அதிகம். விருந்தினர்க்கு முகங் கோணுது

அவன் தொண்டு செய்வன். அவனது கல்வி அறிவுக்கேற்ற அமைதி பொறுமை அடக்கம் இரக்கம் முதலியனவும் பொருந்தியிருந்தன. எல்லாம் பொருந்திய அருமை மைந்தனை ஆண்டவன் விரைவில் அழைத்துக் கொண்டான். அவன் செயல்களும் இயல்புகளும் உருக் கொண்டுலவுவன போல "நவசக்தி" நிலயத்தில் உலவி உலவி உள்ளத்தை உருக்கிக் கொண்டிருக்கின்றன. பெறற்கரிய மாணிக்கத்தைப் பெற்றோம்; இழந்தோம்.

இளமையில் தொடர்ந்த இருமல் நாளடைவில் என்புருக்கியாய் வளர்ந்து வளர்ந்து மைந்தனைப் படுக்கையில் கிடத்திவிட்டது. பால சுப்பிரமணியனை வெளிப்படையாக நோய் தாக்கிய கால எல்லை ஏறக் குறைய ஆறாண்டு. ஏறக்குறைய முதல் நான்காண்டு பையனைப் படுக்கையில் கிடத்தா தொழிந்தன. பின்னிரண்டாண்டு அவனைப் படுக்கையில் அமர்த்தி அவனது கல்விப் பித்தைக் கடவுள் பித்தாக மாற்றிவிட்டன.

பாலசுப்பிரமணியனுக்கு உணவூட்டிய தாயார், கல்வியளித்த தந்தையார், என் தமயனார், மைந்தனுக்கு உயிர் உணவுங் கொடுத்தற்குத் தாம் வழக்கமாக நிகழ்த்தி வந்த வழிபடு கடவுட் பூசையுடன், தமக் கொரு பெரியார் அறிவுறுத்திய மண்டல பூசையுந் தொடங்கினார் போலும். அப்பூசையின் ஒவ்வொரு போதும் மைந்தன் தன்னை மறந்து அதில் மூழ்குவதை யான் பன்முறை கண்டதுண்டு. மண்டல பூசையின் முடித்த நாளாகிய நாற்பதாம் நாள் காலையில் நிகழ்ந்த சிறப்புக்களையும், மாலையில் நடந்த சிறப்புக்களையும் அவ்வேளைகளில் ஏழை மக்கள் உணவு கொண்டதையும், அடியார்கள் பாடிய திருப்பாக்களையுங் கண்டு கேட்டு இன்புற்று, அப்பூசை முடித்து எல்லாரும் உண்டு உறக்கத்துக்குப் போகும் போது, ஆருயிர் மைந்தன் நொடிப்பொழுதில் இன்னுயிர் துறந்தான். அவ்வுயிர் அமைதியில் ஆண்டவன் ஒளியில் ஆறுதல் பெறுக.

இத்துணை நாள் மைந்தன்பொருட்டுத் தாயாரும், தந்தையாரும், மற்ற உறவினரும், நண்பர்களும் இடையீடின்றிச் செய்த முயற்சியை—பட்டபாட்டை—உழைத்த உழைப்பை—எங்குங் கண்கொண்டு காணும் ஆண்டவன் அறிவன். மனித முயற்சிகள் எவ்வளவுண்டோ அவ்வளவும் ஒல்லும்வகை செய்யப்பட்டன என்று சுருங்கச் சொல்கிறேன்.

நாங்கள் மனிதர்கள், கடனாற்றவல்லேம். வேறென் செய்யவல்லேம்? ஆண்டவன் திருவுள்ளம் வேறுவிதமாயிருப்பின், மக்கள் முயற்சி என்னும்? அவனன்றி ஓரணுவும் அசையுமோ?

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்னும் வேதாந்த உண்மை படிந்த உள்ளமும் மைந்தன் காதலை மறக்குங் கொல்! மைந்தன் காதலைத் தணிக்கும் மருந்தும் உண்டோ?

பாலசுப்பிரமணியன் பிரிவால் நெஞ்சுடைந்து கிடக்கும் அடியேன், அருமை மைந்தனை—ஒரு மைந்தனை—பண்பு வாய்ந்த மைந்தனை இழந்த தந்தை என் அருமைத் தமையனார்க்கும், நீர் நிழல்போல் மைந்தனை விடாது சில சமயம் ஊன் உறக்கமின்றியும் இரவு பகல் பாதுகாத்த தாய் என் அண்ணியார்க்கும், தங்களுக்குரிய செல்வமெல்லாம் அண்ணனே என்று கருதியிருந்த அவனுடைய இரண்டு இளஞ் சகோதரிகளாகிய இரண்டு அருமைப் பெண் குழவிகட்கும் 'பாலனே' எங்கள் வாழ்வு என்று எண்ணிய மற்றவர்கட்கும் எம்மொழியால் ஆறுதல் கூறவல்லேன்? நிற்பது துன்பமல்லன்றோ? எல்லாம் ஆண்டவன் செயல்."

வ. க.

தமிழ்நாட்டு அரசுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டமும் விளக்கமும்

I கரணியம் (காரணம்)

இந்துமா வாரியில் முழுகிப்போன குமரிநாட்டில் தோன்றி வளர்ந்த தமிழ், உலக முதல் உயர்தனிச் செம்மொழியாயும் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமாயும் இருந்தும், கடந்த மூவாயிரம் ஆண்டாக மறைக்கப்பட்டும் குறைக்கப் பட்டும், 1936 ஆம் ஆண்டு வெளிவந்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலியில் (Lexicon), ஒரு புன்சிறு புதுக் கலவை மொழியாகவும் சமற்கிருதக் கிளையாகவும் காட்டப் பட்டும் உள்ளது. அவ்வகர முதலியை 'அடிப்படையாகக் கொண்ட பரோவெமனேவர் திரவிடச் சொற்பிறப்பியல் என்னும் ஒப்பியல் அகரமுதலியும், தமிழின் உண்மை யியல்பை உலகத் திற்குக் காட்ட முடியாது போயிற்று.

அதனால், இந்தி மென்மேலும் தமிழை அடர்த்து வருவ துடன், தமிழ்நாட்டுத் தி. மு. க. அரசுச் சட்ட அவை ஒரு மனமாய், நிறைவேற்றிய திருக்கோவில் தமிழ்வழிபாட்டுத் தீர்மானமும் எள்ளளவும் வலியிலதாயிற்று. இங்ஙனம் தமிழின் பெருமையும் தலைமையும் அறியப்படாமையால், தமிழ் வளர்ச்சியும் தமிழன் முன்னேற்றமும் பெரிதும் தடைப் பட்டுள்ளன. மேலும், இதனால் உலக வரலாறு (World History), ஒப்பியன் மொழிநூல் (Comparative Philology), குமுகாயப் பண் பாட்டு மாந்தனூல் (Social and Cultural Anthropology) ஆகிய முப்பேரறிவியல்களும் வளர்ச்சியடையாதும் தெளிவு பெறாதும் கறண்டும் குழம்பியும் கிடக்கின்றன.

இக் கேடுகளை யெல்லாம் நீக்குதற்கு, தமிழ் மக்களின் பேரார்வத்தை நோக்கியும் தவத்திரு குன்றக்குடி யடிகளின் விடா முயற்சிப் பரிந்துரைக் கிணங்கியும், தமிழ் நாட்டுத் தி. மு. க. அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் தொகுப்புத் திட்டம் ஒன்று தலைசிறந்த முறையில் தீட்டியுள்ளது. இது தமிழரனைவரும் பாராட்டி மகிழத்தக்க நற்செய்தி யாகும் இதனால்தான்,

"ஒங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்-ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது
தன்னே ரிலாத தமிழ்."

என்னும் பழம்பாட்டின் பொருள் விளங்க விருக்கின்றது.

II சேந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி அமைப்பு

முதன் மடலம் :

முதற் பகுதி — அ, ஆ
௨-ஆம் ,, — இ, ஈ
௩-ஆம் ,, — உ, ஊ
௪-ஆம் ,, — எ, ஏ, ஐ
௫-ஆம் ,, — ஒ, ஓ, ஔ

௨-ஆம் மடலம் :

முதற் பகுதி — க, கா
௨-ஆம் ,, — கி, கீ
௩-ஆம் ,, — கு, கூ
௪-ஆம் ,, — கெ, கே, கை
௫-ஆம் ,, — கொ, கோ, கௌ

௩-ஆம் மடலம் :

முதற் பகுதி — ச, சா
௨-ஆம் ,, — சி, சீ
௩-ஆம் ,, — சு, சூ
௪-ஆம் ,, — செ, சே, சை
௫-ஆம் ,, — சொ, சோ, சௌ, ஞ, ஞா,
ஞி, ஞெ, ஞே, ஞை, ஞொ

௪-ஆம் மடலம் :

முதற் பகுதி — த, தா
௨-ஆம் ,, — தி, தீ
௩-ஆம் ,, — து, தூ
௪-ஆம் ,, — தெ, தே, தை
௫-ஆம் ,, — தொ, தோ, தௌ

௫-ஆம் மடலம் :

முதற் பகுதி — ந, நா
௨-ஆம் ,, — நி, நீ

௩-ஆம் ,, — நு, நூ
௪-ஆம் ,, — நெ, நே, நை
௫-ஆம் ,, — நொ, நோ, நௌ

௬-ஆம் மடலம் :

முதற் பகுதி — ப, பா
௨-ஆம் ,, — பி, பீ
௩-ஆம் ,, — பு, பூ
௪-ஆம் ,, — பெ, பே, பை
௫-ஆம் ,, — பொ, போ, பௌ

எ-ஆம் மடலம் :

முதற் பகுதி — ம, மா
௨-ஆம் ,, — மி, மீ
௩-ஆம் ,, — மு, மூ
௪-ஆம் ,, — மெ, மே, மை
௫-ஆம் ,, — மொ, மோ, மௌ

அ-ஆம் மடலம் :

முதற் பகுதி — ய, யா
௨-ஆம் ,, — வ, வா
௩-ஆம் ,, — வி, வீ
௪-ஆம் ,, — வெ, வே
௫-ஆம் ,, — வை, வௌ

௯-ஆம் மடலம் (அயற்சொற்கள்) :

முதற் பகுதி — வடசொல்
௨-ஆம் ,, — அரபிச் சொல், பாரசீகச் சொல், உருதுச்சொல்
௩-ஆம் ,, — மராத்திச்சொல், இந்திச் சொல்
௪-ஆம் ,, — ஆங்கிலச்சொல், போர்த்துக்கீயச்சொல், பிரெஞ்சுச் சொல்.

௧௦-ஆம் மடலம் :

பிற்சேர்ப்பு (Supplement). முதல் எண் மடலங்களிலும் விடுபட்டுப்போன இருவகை வழக்குச் சொற்களும், சிறப்பாகப்

பழஞ் சேரநாடாகிய மலையாள நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் வழங்கிவரும் உலக வழக்குத் தமிழ்ச் சொற்கள், பிற்சேர்ப்பு மடலமாக வெளிவரும்.

௧௧-ஆம் மடலம் :

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள் (Principle of Tamil Etymology).

௧௨-ஆம் மடலம் :

தமிழ் அகரமுதலி வரலாறு (History of Tamil Lexicography).

௧௩-ஆம் மடலம் :

முகவுரை, முன்னுரை, 'தென்மொழிச்' செ. சொ. அகர முதலித் திட்டம், தமிழ் நாட்டுத் தி. மு. க. அரசுச் செ. சொ. அகர முதலித் திட்டம், செ. சொ. அகரமுதலி அமைப்பு, அகர முதலிப் பணிக்குழு, கருவிநூற்பட்டி (Bibliography), எழுத்துப் பெயர்ப்பு முறை (Transliteration Table), மேற்கோள் நூற் பட்டி, குறுக்க விளக்கம் (Abbreviations), மேற்கோளாசிரியர் பெயர்ப்பட்டி, மூவகை உதவிக் குழுக்களின் உறுப்பினர் பெயர்ப்பட்டி முதலியன.

ஆகவே, 13 மடலங் கொண்ட ஆக்கசுப்போர்டு ஆங்கில அகரமுதலி (The Oxford English Dictionary) போல, இச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியும் விரிவான முறையில் வெளிவரும் என்பது பெறப்படும்.

III. சே. சோ. அகரமுதலியின் சிறப்புக் கூறுகள்

1. இதுவரை அச்சிற்கு வராத எல்லா இருவகை வழக்குச் சொற்களும் இடம் பெறுகை.
2. எல்லாச் சொற்கட்கும் எல்லாப் பொருளும் இயன்ற வரை குறிக்கப் பெறுகை.
3. இனச் சொற்கள் (Cognates) திரவிட மொழிகளி லிருந்து மட்டுமன்றி, ஆரிய மொழிகளிலிருந்தும் காட்டப் பெறுகை.
4. எல்லாச் சொற்கட்கும் இயன்றவரை வேரும் வரலாறும் வரையப் பெறுகை.

5. இதுவரை வெளிவந்த தமிழகரமுதலிகளிலுள்ள வழுக்களெல்லாம் திருத்தப் பெறுகை.

6. **தமிழின் சொல்வளம்** அயற் சொற்களெல்லாம் தமிழொடு கலவாது தனி மடலமாகத் தொகுக்கப் பெறுகை.

7. மொழிபெயர்ப்பாளர்க்கும் புதுச்சொல் புனைவார்க்கும் தனித்தமிழ் விரும்பியர்க்கும் சொல்லாராய்ச்சி யாளர்க்கும் பயன்படுமாறு, சொல்லாக்க நெறி முறைகள் விளக்கப்படுகை.

8. ஆக்சுப்போர்டு (எருதந்துறை) ஆங்கில அகர முதலியில் (The Oxford English Dictionary) மூலந் தெரியவில்லை யென்று குறிக்கப்பட்டுள்ள சொற்களுட் சிலவற்றிற்கு, தமிழ் மூலம் ஐயந்திரிபற விளக்கப் பெறுகை.

இவ்வுலகில் இதுவரை வேறெந்நாட்டிலும் இத்தகைய அகரமுதலி வெளிவந்ததுமில்லை; இனி வரப்போவதுமில்லை என்று நடுநிலையறிஞர் சொல்லுமளவு, சிறப்பாகத் தொகுக் கப்பட விருக்கும் இவ்வகரமுதலித் திட்டத்தை வகுத்த ஆட்சித் திறவோர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பண்டாரகர் (Dr.) **கருணாநிதியார்** (அருட்செல்வனார்) பெயரும், மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் பண்டாரகர் (Dr.) இரா. **நெடுஞ்செழியனார்** பெயரும், இவ்வுலகுள்ள அளவும் நிலைத்துநிற்கும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

IV. செ. சொ. அகரமுதலித் தொகுப்பாளர் குழு

1. **இயக்குநர்** (ஞா. தேவநேயன், அரசால் அமர்த்தப் பெற்றவர்).

இவர் உச்சத் தமிழ்ப் புலவர் தேர்வு மூன்றும் தேறியவர்; ஐம்பதாண்டு சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் செய்தவர்; தமிழ்ச் சொற்களுட் பெரும்பாலனவற்றிற்கு வேர் கண்டவர்; தமிழ் பற்றிய உண்மைகளை அஞ்சாது சொல்பவர்; தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழி என்பதை உலக மேடையில் நாட்டக்கூடியவர்.

2. **திரவிடச் சொற்றொகுப்பாளர்** (பேரா. மதிவாணனார், இயக்குந ராற் பரிந்துரைக்கப்பெற்று அரசால் அமர்த்தப் பெற்றவர்.

இவர் சேலம் அரசினர் கலைக்கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர். இவர் தாய்மொழி கன்னடம்; இவர் கன்னடமுந் தமிழும் போன்றே தெலுங்கும் மலையாளமும் எழுதப் படிக்கப் பேசத் தெரிந்தவர்; துளு, குடகு, இந்தி ஆகிய மொழிகளும் பயின்றவர். இவர் ஆங்கிலத் தகுதி க.மு., க.ப. (M.A., B.Ed.). பதின்மூவாண்டு உயர்நிலைப் பள்ளிகளிலும் மூவாண்டு கல்லூரியிலும் இவர் பணியாற்றியுள்ளார். பல்லாண்டு மொழி யாராய்ச்சியும் செய்துள்ளார்; தமிழின் பெருமைகளை நடுநிலை யாகவும் அஞ்சாதும் விளம்புந் திறத்தார்.

3. தமிழிலக்கியச் சொற்றொகுப்பாளர் (புலவர் இரா. இளங் குமரனார், இயக்குநராற் பரிந்துரைக்கப் பெற்ற நிலையினர்.)

இவர் மதுரை முத்துத்தேவர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்; இலக்கணப் புலமை நிரம்பப் பெற்றவர்; சொற்பொருள் நுட்பங் காணும் ஆற்றல் மிக்கவர்; பல சிறந்த நூல்களின் ஆசிரியர்; சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடான களவியற்காரிகை, காக்கைபாடினியம் முதலிய உயர்நிலை இலக்கண நூல்களின் பதிப்பாசிரியர்; ஆராய்ச்சி வல்லுநர்.

V. மூவகை உதவிக் குழுக்கள்

(i) கண்ணிய அறிவுரையாளர் (Honorary Advisers)

1. தவத்திருக் குன்றக்குடி அடிகள். 2. மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் பர். (Dr.) இரா. நெடுஞ்செழியனார். 3. மாண்புமிகு நலத்துறையமைச்சர் அன்பழகனார். 4. அரச வயவர் (Raja Sir) முத்தையாச் செட்டியார். 5. தாமரைச் செல்வர் வ. சுப்பையாப் பிள்ளை. 6. முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம். 7. உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. 8. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை. 9. திரு. (K. C. A.) ஞானகிரியார். 10. பேரா. தி. வை. சொக் கப்பனார். 11. சட்டமன்றச் செயலாளர் திரு. மா. சண்முகசுப்பிர மணியனார். 12. திரு. இரா. முத்துக்குமாரசாமி, பொதுச் செயலர், 'யுனெஸ்கோ' குழு, வாலாஜாபாத்து. 13. திரு. வெ. கோபாலகிருட்டிணனார், முதல்வர், வணிகக் கல்விச்சாலை, சிங்கப்பூர். 14. திரு. பெருமாள் முதலியார், ஓய்வுபெற்ற புதுவைக் கல்வித்துறை இயக்குநர். 15. பேரா. தாமோதரனார், கோவை. 16. திரு. சொக்கலிங்கம், மேலாண்மை இயக்குநர், பாடப்பொத்தக நிறுவனம், சென்னை.

(ii) **கண்ணியச் சொல்லுதவியாளர்** (Honorary helpers in preparation of the Dictionary with material).

1. திரு. பி. எல். சாமி, பி.எஸ்ஸி. 2. பேரா. வீ. பா. க. சொல்லழகர் (சுந்தரம்) எம்.ஏ. 3. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், எம்.ஏ., எல்.தி. 4. திரு. பிறை யணிவோன். 5. ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், எம்.ஏ. 6. புலவர் முனியப்பன், 7. புலவர் வேங்கடவேள், தமிழாசிரியர், து. க. உயர்நிலைப்பள்ளி, நத்தம். 8. பர். (Dr.) வ. சுப. மாணிக்கம். 9 பேரா. கணேசனார், அழகப்பா பொறிவினைக் கல்லூரி. 10. பர். (Dr.) ந. சுப்பு ரெட்டியார், திருப்பதிப் பல்கலைக்கழகம். 11. பண்ணாராய்ச்சியாளர், குடந்தை-சுந்தரேசனார். 12. கணியர், தமிழறிஞர் இ. மு. சுப்பிர மணியப்பிள்ளை. 13. தமிழ் மன்றம், பொறியியற் கல்லூரி, கிண்டி, சென்னை. 14. திரு. சி. பி. கிருஷ்ணையா, 'தமிழம்,' கொலக்கம்பை, நீலமலை.) தமிழியக்கப் பாசறை, காரைக்குடி-3. 15. முத்தமிழ் மன்றம், தொழில்நுட்பக் கல்லூரி, கோவை. 16. பிலோ இருதயநாத்.

(iii) **கண்ணிய விடையுதவியாளர்** (Honorary Referees).

1. பெரும்புலவர் (மகாவித்துவான்) மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை. 2. வரலாற்றாராய்ச்சியாளர் மயிலை—சீனி வேங்கடசாமி. 3. பர். (Dr.) வா. செ குழந்தைசாமி. 4. பேரா. கொண்டல் மகாதேவன், இயக்குநர், தமிழ் வளர்ச்சிக் கழகம். 5. சிலம்பொலி சு. செல்லப்பனார், தனி அலுவலர், தமிழ் வளர்ச்சிக் கழகம். 6. பர். (Dr.) ஔவை து. நடராசன். 7. திரு. இரா. முத்துக்குமாரசாமி, நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம். 8. சிறுகதை மன்னர் திரு. அகிலன். 9. இராவ் சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை. 10. பேரா. கோ. நிலவழ கனார் (இராமச்சந்திரன்). 11. பர். (Dr.) மெ. சுந்தரம். 12. பாவலரேறு பெருஞ்சித்திரனார். 13. திரு. சுந்தர சண்முகனார், புதுவை. 14. பண்டித கா. பொ. இரத்தினம், இலங்கை. 15. பர். (Dr.) பொன் கோதண்டராமன். 16. பர். (Dr.) குருமூர்த்தி, பூ. சா கோ. கல்லூரி, கோவை. 17. பர். (Dr) ஞானமூர்த்தி, பூ. சா. கோ. கல்லூரி, கோவை. 18. பேரா. லெ. பெ. கரு. இராமநாதன் செட்டியார்.

குறிப்பு :

1. தேவையாயின், தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாகவும் குழுக்கள் அமைக்கப்பெறும்.

2 முதல் ஒன்பது மடலங்களும் முடிந்தபின், மலையாள (கேரள) நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் இதுவரை அச்சிற்கு வாராத சிறப்புச் சொற்களெல்லாம் தொகுக்கப்பெறும்.

3. இத் திட்டம் பற்றிய கருத்துகளை அறிஞர் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளியிடலாம்; அல்லது, இயக்குநர்க்குத் (S. P. 57, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-78) தெரிவிக்கலாம்.

4. மூவகை உதவிக் குழுவாரும் இயன்றவரை உதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

5. விடையுதவியாளர் என்பார், ஏதேனும் சொற்பொருள் பற்றி வினவிய வினாக்கட்கு விடையளிப்பவராவர்.

VI. செ. சொ. அகரமுதலி அலுவலக இடம்

இவ்வகரமுதலி அரைக் கலைக்களஞ்சிய முறையில் விரிவாக வெளிவரவிருப்பதால், பல்துறை நூல்களையும் பயன்படுத்தக் கூடியவாறு, சென்னைக் கன்னிமரா நூல்நிலையத்தைச் சேர்ந்த கூடம் ஒன்றில், இதற்கு அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

VII. தமிழ் விடைமுகக் குழு (Tamil Delegation).

தமிழின் பெருமையைப் பிற நாடுகட்கு எடுத்துரைத்தற்கும், செ. சொ. அகரமுதலிக்கு அவற்றின் அரசுகளின் அல்லது பல்கலைக் கழகங்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுதற்கும், கீழ்க் குறித்தவரைக் கொண்ட ஒரு குழுவை மேனாடுகட்கும், கீழ்நாடுகட்கும், தமிழ்நாட்டு அரசு அனுப்பிவைப்பின் மிக நன்றாயிருக்கும்.

1. மாண்புமிகு நலத்துறை அமைச்சர் அன்பழகனார்.
2 திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.
3. பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், எம்.ஏ., எல்.டி.
4. ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், எம்.ஏ.
5. இராவ்சாகிபு கு. கோதண்டபாணிப் பிள்ளை.

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(சிலம்பு ௨௭, பரல் ௨இன் தொடர்ச்சி)

21. பசுந்தீவில் பத்து நாள்

சிவனருளாலே வந்தேன்

இதோ மடகாஸ்கர் தாண்டியாயிற்று—பசும்பொன்னழகு அழைக்கிறது; சிவ சிவ சிவ சிவ என்று கிழக்காப்பிரிக்க விமானம இறங்குகிறது—8-1-73 மாலே 5 மணி—விமான நிலேயத்தில் தமிழர் கூட்டம்; இதோ ஏ. வி. செட்டியார், M.P., மாலேயுடன் வருகிருர். ''தலேநிமிர் தமிழா-பெற்ற-தாயின் மனங்குளிர'' என்ற எனது பாடலே ஆயிரம் குரல்கள் பாடி ''வருக சுத்தானந்தர் வாழ்க'' என்று ஆர்க்கும்போது என் உள்ளம் ஆவேசமாகப் பாடியது!

''சிவனருளாலே வந்தேன்
அவனருளே என்சிந்தை
சிவனருளாலே வாழ்வோம்
சிவனூர் அன்பே சூழ்வோம்!''

பிரெஞ்சுப் புலவர் பலர் வந்தனர். அவர்களுக்குப் பிரெஞ்சில் பாடினேன் :

Marchons herss de la terre
Comme un flot etoile
Avec l'espoin aile
Marchons vers la nouvelle ere
முன்முன் செல்வோம் வாரீர்
உலகின் வீரர் சேரீர்
மின்விண் மலர்களைப் போலே
வேகப் பறவைகள் போலே
பொன்புது யுகத்தை நோக்கிப்
புதுப்புது நம்பிக்கை யுடனே
முன்முன் செல்வோம் வாரீர்
முயற்சி வெல்லும் பாரீர்!

என்ன அன்பு! என்ன ஆர்வம். தமிழ்ப்பேர் ஆசிரியர் தலேவர், தமிழ்க்காப்பாளர் அருணசலனுடன் எனக்கு மாலே

சூட்டி மகிழ்ச்சி கூவுகின்றனர். பசுந்திருத்தீவு மோரிசு திருமகள் நடம்புரியும் அழகுச்சோலை. நடுவே மலைத்தொடர்; ஆற்றுப் பாட்டும், கடல் முரசும், தென்றற் குழலும், புள்ளிசை யாழும், உள்ளத்தை அள்ளும் கவிநயம் காட்டுகின்றன. நண்பருடன் நாவு பேசுகிறது; கை கவிதை எழுதுகிறது! மோரிசை ஒரு சுற்றுச் சுற்றினேம்.

* * *

மோரிசு வரலாறு

மோரிசு மடகாஸ்கரிலிருந்து கிழக்கே 500 மைல் தொலைவில் உள்ளது. அதைச் சுற்றிலும் பல சிறிய தீவுகள் உள்ளன. இந்தத் தீவு எரிமலை வெடித்துப் பரந்தது. இதன் நீளம் 40 மைல், அகலம் 50 மைல், பரப்பு 750 சதுர மைல். இந்துக் கடலில் மரகதமணி போல விளங்கும் இந்தத் தீவு தமிழர் உழைப்பினல் வளம் பெற்றது. இது 1505ஆம் ஆண்டில் மஸ்கரேனஸ் என்ற போர்ச்சிகரால் கண்டுபிடிக்கப் பெற்றது. அதற்கு Cirnos Isle (அன்னத் தீவு) என்று பெயரிட்டனர். 1598ல் இதை டச்சுக்காரர் கைப்பற்றினர். ஸ்பெயின் இளவரசர் மோரிஸ் என்பவர் பெயரால் மோரிசு தீவு என்ற பெயர் வந்தது. அதிலுள்ள எபனி மரங்களை யெல்லாம் வெட்டிச் சாய்த்த பிறகு ஸ்பானியர் தீவைக் காலி செய்தனர்; உடனே பிரெஞ்சுக்காரர் புகுந்தனர் (1735) .1810-ல் பிரிட்டிஷ் காரர் தீவில் குடியேறினர். 1834-ல் தமிழ்நாட்டுப் பாட்டாளி களை இங்கே கப்பலிற் கொணர்ந்து பிரிட்டிஷ்காரர் கரும்பு விளைத்தனர். இத் தீவைப் பண்படுத்திப் பசுமையாக்கியது தமிழர் உழைப்பே. 1959 முதல் இந்தத் தீவு விடுதலை பெற்றுக் கவர்னர் ஆட்சிக்குள் வந்தது; அவருக்குச் சட்டசபையில் 65 பிரதிநிதிகள் துணை செய்கின்றனர். 9 பேர் நிர்வாக சபையினர். இங்கே ஆங்கிலம், பிரெஞ்சு இரண்டும் அரச மொழியாக வழங்கும். கிரியோல் என்ற கதம்பப் பேச்சு பொது மக்களிடையே வழங்குகிறது. இங்கே சுமார் 8 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவருள் பெரும்பாலார் இந்தியர், இந்துக்கள், இஸ்லாமியரும் உள்ளனர். 20,000 சீனர் இங்கே வசிக் கின்றனர். 1000 ஆங்கிலேயர் இருக்கின்றனர். இந்தத் தீவைச் சுற்றிப் பவளக்கொடி படர்ந்துள்ளது. இதன் தலைநகர் போர்டு லூயி. இங்கேதான் A. V. செட்டியார் பங்களா உள்ளது. இங்கே கப்பல் நடமாட்டம் அதிகம். வாழை, மாங்காய் முதலிய கனிகள் விளையும். ஆனல், 99% கரும்பு தான். மலர்கள் அழகாகப் பூத்துக் குலுங்கும். இங்கே கறுப்

பாறு (Black River) ஓடுகிறது. நீர்வீழ்ச்சி—மின்சாரத்தால் பல தொழில்கள் நடக்கின்றன. இனி நம் நிகழ்ச்சிகளைக் காண்போம்.

அயரா அருட்பணி

வரவேற்பு மிகச் சிறப்பாக நடந்தது. சிவானந்த ஆசிரமத்தில் எனக்கு வசதியாக இடம் கிடைத்தது. இது ரோஸ் ஹில் என்ற பகுதியில் உள்ளது. இங்கே சுவாமி வேங்கடேசானந்தர் அரிய அருட்பணி செய்கிறார். அவர் என் கூட்டங்களுக்கு வந்து ஊக்கினார். ஆசிரமம் முழுதும் என் இருக்கையாக்கி அவர் வெளியூர் சென்றுவிட்டார். இங்கே சீனர், வட நாட்டார், தமிழர், ஜப்பானியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய பலர் காலை மாலை வந்து என்னுடன் தியானிப்பதும் யோகப் பயிற்சி செய்வதுமாயினர். தமிழ்ப் பணித் தலைவர் அருணாசலம் எனக்குச் செய்த உதவி மிகப் பெரிது. அவர் ஆசிரியர் கூட்டத்தில் என்னைப் பேசச் சொன்னார். பொது மக்கள் கூட்டத்தில் நான் தமிழ் எளிதாகக் கற்கும் முறையை விளக்கினேன். அவர்களுக்காகப் பாட நூல்களும் வகுத்தேன். அருணாசலம் என் பாடல்கள் நூறு நாடாப் பதிவு செய்து ஒலி பரப்பினார். ஏ. வி. செட்டியார் பெரிய வணிகச் செல்வர். நல்ல செல்வாக்குள்ளவர். சிமெண்டுத் தொழிலும் நடத்துகிறார். இவர் சிவனடியார், சட்டசபை உறுப்பினர்.

நான் வந்த நாளே வானொலியில் ஒரு பேட்டியும், அரை மணி நேரப் பேச்சும், பாட்டும் நிகழ்த்தினேன். பிரெஞ்சு, ஆங்கில இதழ்கள் எல்லாம் என் வரவையும் வரலாற்றையும் படத்துடன் வெளியிட்டன.

அமைச்சரைக் காணல்

ஏ. வி. செட்டியார் மோரிசுக் கோவில்களுக்கெல்லாம் தலைவர். ஆதலால் எல்லாக் கோயில்களிலும் சமயச் சொற்பொழிவுகளுக்கு நல்ல ஏற்பாடு செய்தார். பொதுமக்களுக்குப் பிரெஞ்சுதான் அதிகம் வரும். ஆதலால் நான் தமிழில் திருமுறை பாடிப் பிரெஞ்சில் விளக்கம் செய்தேன். பள்ளிக் கூடங்களிலும் அவ்வாறே. ஆரிய சமாசத்தில் வட நாட்டார் முன்பு இந்தியிலேயே பேசினேன். இங்கே ஆரிய சமாசம் கல்லூரி நாட்டி வியன்பெருந் தொண்டு செய்கிறது. நான் தமிழருக்குச் சைவசித்தாந்தம் புகட்டி ஒரு சங்கமும் நாட்டினேன். ஏ. வி. செட்டியார் என்னைக் கவர்னர்

A. L. வில்லியம்ஸ், முதலமைச்சர் ராம்குலாம், நிதியமைச்சர் ரங்கதேவர், தொழிலமைச்சர், கல்வியமைச்சர் அனைவருக்கும் அறிமுகம் செய்தார். பயனுள்ள பேச்சு நடந்தது. பிறகு இந்திய ஹைகமிஷனர் Y. R. தாவனைக் கண்டு நெடுநேரம் பேசினேன். அவரே ஆப்பிரிக்காவில் இந்தியர் நிலையைத் தெளிவாக விளக்கினார். அனைவரும் எனது Gospal of Perfect Life என்னும் யோகசித்தி நூலைப் படித்துப் போற்றினர்.

இந்தியாவின் குரல்

இங்கே காந்தி நிலையம் உள்ளது; மிகப் பெரிய சொல்லரங்கம் அதில் உள்ளது. நிலையச் செயலர் எனக்கு அங்கே சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தார். அறிஞர், அரசியலார், ஆசிரியர், வணிகர், மந்திரிமார் அனைவரும் வந்தனர். அனைவருக்கும் ஆங்கிலம் வரும். இந்தியாவின் குரல் (Voice of India) என்ற தலைப்பில் மகாத்மாகாந்தி, அரவிந்தர், ரமணர், சாயிபாபா, சிவானந்தர் போன்ற மகான்கள் வரலாற்றையும் யோக முறைகளையும் ஆங்கிலத்தில் விளக்கினேன். கல்வி மந்திரி R. ஜமேதார் தலைமை வகித்தார். என் பேச்சு அப்படியே வானொலிப்பானது. இதழ்களிலும் வந்தது.

அன்பர் கூட்டம்

கூட்டம் பெருத்தது. ஆனால், பயனுள்ள ஆர்வலர் கூட்டமே. நான் ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய ஐந்து மொழிகளில் பேச நேர்ந்தது. ஒரு டெலிவிஷன் சொற்பொழிவும் ஏற்பாடானது. என் உணவு முறையைப் பலர் பின்பற்றினர். ஊன் மறுத்துண்டனர். சிலருக்கு மருத்துவமும் மனநோய் தீர மந்திர ஜபமும் செய்தேன்.

நடமுன்! நடமுன்!

தமிழ்ப் பாட்டுக் கேட்பதில் மோரிசுத் தமிழருக்கு எவ்வளவு ஆர்வம்! நாடாப் பதிவு செய்கின்றனர். நான் பாடப் பாட—பாடியதைப் பாடம் செய்கின்றனர்! ஒரு தனித் தமிழர் பெருங் கூட்டத்தில் பாடியாடிய பாட்டு இது; கேளுங்கள்,

1

நடமுன் நடமுன் விரைவாக
ஞாலத்துடனே காலத்துடனே
விடுமுன் விடுமுன் வேற்றுமையை
வீரத்தமிழா வீறுடனே

நடமுன் நடமுன் ஒற்றுமையார்
　　நன்றுடுகளுடன் முன்னேறி
　　நடமுன் கடமை வீறைவேற

2

வீரம்வீரம் வீரமென்றே
　　மீசைமுறுக்கித் தலைநிமிர்ந்தே
　　விம்மித்தோள்கள் புடைத்திடவே
நேரந்தன்னைப் பொன்னாக்கி
　　நினைத்தபணிகள் அனைத்தும்வெல்ல
　　நின்புகழை நிலஉலகம்சொல்ல
　　நடமுன் நடமுன்னணியினிலே

3

அச்சப்பேய்கள் அஞ்சிடவே
　　ஆண்மைக்கனலை நெஞ்சில் வளர்
உச்சக்குரலில் ஓம் எனவே
　　ஓதிச்சோதிப் பிழம்புடனே
　　　　நடமுன்! படைசேர் நண்பருடன்!

என் நூல்கள் இத் தீவில் பரவியிருக்கின்றன. பல வீடுகளில் என் பாடல்கள் முழங்குகின்றன. என் பிரெஞ்சுப் பாடல்களும் இங்கே பரவின. பிரெஞ்சில் வந்த சில செய்திகளைத் தமிழில் தருகிறேன்.

மோரிசில் புகழ்பெற்ற மகரிஷி

“மோரிஸ் மக்கள் அழைப்பிற்கிணங்க மகரிஷி சுத்தானந்த பாரதியார் விமானத்தில் வந்து இறங்கியதும் நண்பருடன் உளங் கலந்து பேசினார்; பாடினார். அவர் ரோஸ் ஹில் சிவானந்த ஆசிரமத்தில் தங்கியுள்ளார். காலை மாலை ஏராளமான அன்பர் அவரிடம் யோகம் பயில்கின்றனர். கீதை உபநிஷத் பாடம் கேட்கின்றனர். கோயில்களில் அவருக்கு மேளதாளங்களுடன் வரவேற்பு நடந்தது. வெள்ளிக்கிழமை குவீன் எலிசபெத் கல்லூரியிலுள்ள காந்தி நிலையக் கூடத்தில் அவர் ஒன்றரை மணி நேரம் ஆங்கிலத்தில் பாரதநாட்டு மகான்களைப் பற்றி ஆவேசமாகப் பேசினார். அதை வானொலியில் மக்கள் கேட்டிருக்கலாம். கல்வி மந்திரி R. ஜமேதார் மகரிஷியின் அறிவாற்றல்களையும், உயர்ந்த கருத்துகளையும் புகழ்ந்தார். இவர் பிறவி யோகி; பல மகான்களிடம் பயின்

றவர். இவரது சமயோகம் பாரத சக்தி மகா காவியத்தில் விளக்கப்பட்டுள்ளது. இவர் சாதிமத நாடு நிற வேறுபாடுகளை மனக் கட்டுமானம் என்று ஒதுக்கி, எல்லாரும் ஆன்மநேயராக ஒன்றுபட்டு வாழவேண்டும் என்கிறார். ஒரே கடவுள், ஒரே உலகம், ஒரே ஆன்மநேயராக; வானக்குடை நிழலில் ஒரே குலமாக உழைத்துப் பிழைத்து முன்னேறுவோம் என்கிறார்.

இவர் பன்மொழி, பலதுறைப் புலவர். 1500 அரியநூல்களை எழுதியுள்ளார். இவர் திலகர், காந்தி, அரவிந்தர், ரமணர் முதலிய மகான்களுக்கு நண்பர். இருபத்தைந்து ஆண்டுகள் மௌன நிட்டையிலிருந்து அருள் எழுச்சியால் அறிவுப்பணி புரிந்தார். எல்லா நாடுகளையும் சுற்றிப்பார்த்துச் சமயோக சமாஜம் சென்னையில் நாட்டித் தவமும் கவியுமாயிருக்கிறார். அவரைச் சுற்றி யோக சக்தி பரவி வெதுவெதுப்பாகச் சுழல்கிறது. அவர் எப்போதும் அமைதியாகவும் அன்பாகவும் இளம் பொலிவுடனும் இனிதாயிருக்கிறார்.''

மோரிசுத் தமிழருக்கு இரண்டு நாள் தேவாரம் பாடித் திருவருட் சைவத்தைப்பற்றி இசைச் சொற்பொழிவாற்றினேன்.

சமயோக விளக்கம்

பிரெஞ்சுக் கழகத்தினர் மோரிஸ் நாளிதழ் ஆசிரியருடன் வந்து என்னுடன் உரையாடல் நடத்தினர். அது முழுதும் படத்துடன் வெளிவந்தது. சில வினாவிடைகளை இங்கே தருகிறேன். வானொலிக்காரர் கேட்ட கேள்விகளும் இதில் அடங்கும்.

வினா: மோரிசு மக்கள் உங்களைப்பற்றி உயர்வாகவும் வணக்கமுடனும் பேசுகிறார்கள். தங்கள் பாட்டும் உரையும் அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. இந்த முதிய வயதிலும் தாங்கள் இளந்தெப்புடன் உற்சாகமாகக் காண்கிறீர்கள். எதனால்?

நான்: எங்கள் முனிவர் கடவுளை **"எப்போதும் இனியான், நன்றுடையான் தீயதில்லான்''** என்று பாடுகிறார்கள். அத்தகைய கடவுளை எப்போதும் உள்ளே கலந்திருப்பதால் என் வாழ்வும் நல்லினிய ஆக்கமாக அமைந்தது.

வினா: கடவுளை எப்படிக் கண்டீர்? எங்களுக்குக் காட்டுவீரா?

நான்: கடவுள் என்னுள்ளே என் உள்ளமாய் நடமாடுவதை எப்போதும் உணர்கிறேன். அதே கடவுளே உங்கள்

உள்ளும் நடமாடுகிறுர். அவரைக் காட்ட நான் யார்? காணத்தகுதியிருந்தால் அவரே உங்களுள் காண்பாரே?

விறு: காணும் தகுதி எப்படி உண்டாகும்?

நான்: அருளால்—அவன் அருளே கண்ணுகக் காணின் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் என்று யாரும் எழுதியோ சொல்லியோ விளக்க முடியாது. அருளே அவனை உணர்த்தும்.

விறு: அருள் என்றுல் என்ன? எப்படி எய்தும்?

நான்: மின்சாரம் என்றுல் என்ன? எப்படி எய்தும்?

விறு: மின்சாரம் இயற்கைச் சக்தி: அது நீர் வீழ்ச்சியிலிருந்தும், அனலிலிருந்தும், வானிலிருந்தும் வருகிறது. பல யந்திர சாதனங்களால் கம்பிகள் இணைத்து அடைகிறோம். விசிறியில் காற்று, விளக்கில் வெளிச்சம், ரேடியோவில் ஓசையாக விளக்கமாகும்போதே மின்சக்தியை அறிகிறோம், அருள் என்பது மின்சக்தி போன்றதா?

நான்: மின்சாரம் இயற்கைத்திறன்; பூதபௌதிக சக்தி. அருள் என்பது தெய்வத்திறன்; ஆத்மசக்தி. மின்சாரம் பல டர்பைன்களில் நீர்வீழ்ச்சி சுற்றிவருவது. அருள் என்பது நமது தூய அந்தக்கரணங்களில் தீவிரமான தியானம், தைலதாரை மாதிரி தியானம் சுழன்று எய்துவது. அதற்கு முதலில் வேண்டுவது கருவிகரண சுத்தியும், இதயத்தில் தீவிரபக்தியும், வாழ்வில் ஒழுக்கமும் உள்ளமைதியும் ஆகும். மனம் சுற்றிச் சுழன்று புறந்திரிந்தால், முக்குண விகாரக் குப்பைகளை உள்ளே கொண்டு தள்ளி அறிவைப் பாழாக்குகிறது; அருளை வழியடைக்கிறது.

விறு: ஆம்! மனம் குரங்குபோலும் கறங்கு போலும் சுழன்று அமைதியைக் கெடுக்கிறதே. அதை அடக்க வழியென்ன? தியானம் நிலைப்பதில்லையே...படித்தாலும் மனம் அடங்கவில்லை.

நான்: மனம் என்பது சங்கற்பமூட்டை, நினைப்பின் தொகுப்பு.

நினைத்து நினைத்து நினைப்பற்று நெஞ்சே
நினைப்பற்றி நீயாகி நில்
வந்ததையும் போனதையும் வாதனைப்பட் டெண்ணுவதேன்?
சிந்தையலையாதிருக்கச் செய்.

நினைப்புகளைச் சாட்சியாக, மௌனமாக, உள்ளடங்கிக் கவனித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அவை வர வர "எங்கே வந்தீர்கள் போங்கள் புறத்தே" என்று ஒதுக்கித்தள்ளி நிம்மதியாயிருந்து நெஞ்சத்துடிப்பு அல்லது மூச்சையே கவனிக்க வேண்டும். மனம் கலங்கியலையும் எதிலும் ஈடுபடக்கூடாது. உணவு, உறக்கம், பேச்சு, படிப்பு, செயல் எல்லாம் தூயவாயிருக்கவேண்டும். உள்ளக் கோவிலில் உடையான் இருப்பதை உணர வேண்டும். முதலில் மந்திரஜபம் பிறகு உள்ளமைதி—பிறகு தியானம் எய்தும்.

வினா : நீங்கள் சிறுவயது முதல் எத்தனையோ மொழிகள் கற்று, நூல்கற்று, எழுதி, பாடி, பொது நலப்பணிகள் செய்து, விஞ்ஞான ஆசிரியராகவும், விடுதலை வீரராகவும், சீர்திருத்தச் செம்மலாகவும், யோகியாகவும், பலமுனிவர்களுக்கு நண்பராகவும்; பலநாடுகளைச் சுற்றுநராகவும் இருந்தும் எப்படி யோகசித்தி பெற்றீர் ?

நான் : நான் செய்ததெல்லாம் இறைவனுக்கே ஈந்து யோகத்திலேயே இயங்கினேன். நான் எங்குச் சுற்றினாலும் உள்ளத்தானையே உறுதியாகப் பற்றி நின்றேன். நாளடைவில் மனம் என்பதே இல்லை; உள்ளமே, உள்ளத்தின் உள்ளேயுள்ள தருவே, என் கற்பகமே, கண்ணே, கண்ணின் கருமணியே, மணியாடு பாவாய் - என்று அருளை உள்ளே துருவிச் சென்றேன். கடவுளைத்தவிர வேறு நினைப்பில்லை. அந்த நிலையில் அருளெழுச்சி, சத்திநிபாதம் பெற்று. என்னுள் உயிர்ப்பான சுத்தசக்தி பரமாத்மனை யுணர்ந்தேன். அவன் உணர்வின்மூர்த்தி. அவனுணர்வே என் வாழ்வின் விசைக்கயிருகும். அவன் ஆட்ட நான் ஆடுகிறேன். அடங்கு என்றல் அடங்குகிறேன். என் சீவன் சிவமயம், சிவமணம், இதுவே சமயோக சித்தி.

வினா : உங்கள் யோக முறைக்குச் சமயோகம் என்பதேன் ?

நான் : சாதி, சமயம், உரு, குரு என்பதெல்லாம் இன்றி எல்லாரும், ஒருமைகொண்டு, உள்ளே புகுந்து உணரும் ஒருமயப் பொருளான சுத்த சக்தி பரமாத்மன் உணர்ச்சியில் வாழ வழிகாட்டுவதால் எல்லாருக்கும் பொதுவான சமயோகம் எனலாயிற்று. இதுவே வேதாகம முனிவர் பயின்றயோகம்.

வினா : இந்த யோகசித்தி தங்களுக்கு எப்படிக் கிடைத்தது ?

நான் : நான் சென்ற நான்கு பிறப்பிலும் யோகியாகவே யிருந்தேன். சென்ற பிறவியில் காசியில் தவம் புரிந் தேன். என் யோகானுபவங்களை எழுதி உலகிற்குத் தரவே இப் பிறவி வந்தது. அது நிறைவேறியது; இனிப் பிறவி யில்லை. விட்டகுறை முடிந்தது.

வினு : தங்கள் யோகசித்திக்கு உறுதுணையான முனிவர் யாவர்...தங்கள் அறிவைத் தூண்டிய அறிஞர் யாவர்...

நான் : பூரணனந்தமகரிஷிகளே ஆறுவயதில் என் பிறவிப் பணியை அறிந்து முறையாக யோகம் பயிற்றி, கீதை விளக்கமும் செய்தார். பிறகு ஞானசித்தர் என்ற இமாலய முனிவர் உள்—பிராணுயாமம், நாடிதாரணை, மகாதுரியயோகம் எல்லாம் பயிற்றி என்னைத் தம் அருள்மகன் போலப் போற்றினுர். பிறகு சிருடி சாயிபாபா ''மௌனமாயிரு'' என்று தலையில் கையை வைத்து ஆசீர்வதித்தார்; ரமண மகரிஷிகள் இதயவித்தையும் சகஜசமாதியும் பெற அருளிக் குகைக்கு அனுப்பினுர். அரவிந்தரே என் மௌனத்திற்குத் தமது திருவடியில் புகலளித்து மகாதுரிய சமாதி சித்தி பெற்றுச் சமயோக நிறைவு பெற உதவினுர். அந்த அனுப வத்தால் பாரத சக்திமகாகாவியம் எழுதினேன்.

வினு : நீர் ஏன் அரவிந்தரைப் பிரிந்தீர்? ஆசிரமம் பிடிக்க வில்லையா?

நான் : நான் ஓர் ஆளையோ, இடத்தையோ சார்ந்திருப்ப தில்லை. உள்ளமே என்கோவில்; அதில் உள்ள சுத்த சக்தி பரமாத்மனே என் கடவுள். அவன் இரு என்ற இடத்தில் தவம்புரிவதும், செல்என்ருல் செல்வதும் என் வழக்கம். எப்போதும் சுதந்தரமாகவே யிருப்பேன். சுத்தம், சுதந்தரம் சமத்துவம் உள்ளொருமை, உள்ளெழுச்சியைப் பாடுவது—இவையே என்கொள்கை.

வினு : இவ்வளவு தெளிவாக பிரெஞ்சு பேசுகிறீர்? கவி பாடுகிறீர்! எங்கே கற்றீர்? என்ன நூல்கள் படித்தீர்?

நான் : நான் இளமையிலே பாதிரிமாரிடமே ஆங்கிலமும், பிரெஞ்சும் கற்றேன்; என்னை பிரெஞ்சுக் கவியாக்கியது அரவிந்த அன்னையே. ரஸீன், கொர்நெய், மோலியர், விக்தர்ஹ்யூகோ, தூமாஸ், அனதோல் பிரான்ஸ், பூல்ரேமா, கோதியே முதலிய பல நூல்களை ஆராய்ந்

தேன். எனக்குப் பிடித்த கவி ரஸீன், நாவலர் ஹ்யூகோ— பல நல்ல பிரெஞ்சு நூல்களைத் தமிழாக்கினேன்.

வி௫: தாங்கள் கண்ட பேரறிஞர் யார்? என்ன பயன் பெற்றீர்?

நான்: நான் ரவீந்திரநாத தாகூரை அடிக்கடி பார்த்து என் கவிதைகளைப் படித்துக் காட்டுவதுண்டு. பிறகு பெர்க்ஸன், ஈரேன் கூரி, ஜெலிகோ கூரி, ரோமாரேலான், காரல் குஸ்டாவ ஜுஸ்டு, பெட்ராண்டு ரஸ்ஸல், பெர்னர்ட்ஷா முதலியோரைக் கண்டு உரையாடியுள்ளேன். இவர்கள் வரலாறுகளை யெல்லாம் எழுதியுள்ளேன்.

வி௫: பேரறிஞரும் யோக சித்தருமான நீர் இன்று மனித சமுதாயம் மகிழ என்ன வழி சொல்லுகிறீர்?

நான்: உள்ளேதிரும்பு; உள்ளும்புறமும் தூய்மையுறு; உள்ளத்தை ஆத்ம தியானத்தில் பொருத்து; மனம் அலையாது அடங்கு; பேச்சைச் சுருக்கு; மூச்சை வீணாக்காது— அடக்கு—

எங்குற்றாம் என்ன செயல்
எங்கு செலல் என்றறிவோன்
கங்குற் கடல் கடந்தோன் காண்

சிந்தித்துப் பிறவி ஏன் வந்தது; பிறவிப்பணி யென்ன என்றறிந்து அதைச் செய்து நிம்மதியாயிரு—உழைத்துப் பிழை. ஊர் வம்புக்குப் போகாதே—யாருக்கும் எதற்கும் அடிமையாகாமல், ஆண்டவனைப் பற்றி நில்—இதுதான் நான் சொல்லக் கூடியது. Gospel of Perfect Life என்ற நூலில் சமயோக சித்தாந்தம் விளங்கும். பாரத சக்தியில் அதைப் பல கதைகளால் எடுத்துக்காட்டிச் செயலுக்கு ஊக்கியுள்ளேன்.

* * *

போதும் பேச்சு இனித் தியானிப்போம்; அன்பர் வந்தனர்—தியானம் பத்து நிமிடம் நடந்தது—பிறகு தெய்வப் பாடல்களுடன் கூட்டம் முடிந்தது.

மோரிசு வாழ்க!

பத்து நாள்கள் பறந்தன. இறுதியில் எனக்கு போர்டு லூயி மாளிகையில் மாபெருங் கூட்டம் கூட்டிப் பொதுமக்கள்

புகழும் பரிசும் அளித்தனர். என் பாடல்களைப் பாடினர். ஏ. வி. செட்டியார் M.P. ரூ. 1786 பரிசில் அளித்தார். அதை நான் ஏற்கவில்லை. திருப்பித் தந்தேன். அவர் நான் மறுநாள் விமானம் ஏறும்போது ஒரு பையில் போட்டு என் கைப்பையில் வைத்துவிட்டார். அதைப் பம்பாயில் சுங்க அதிகாரி கண்டு பறிமுதல் செய்து நூறு ரூபா அபராதமும் போட்டுவிட்டான்—பணத்தால் வந்த படர்! ஒழிந்தது பற்று என்று பம்பாயில் யோக நிலையத்தில் இரண்டு நாள் இருந்து சென்னைக்குப் பறந்து வந்தேன்.

மோரிசு அன்பருக்கு நான் பிரெஞ்சில் பேசிய பேச்சின் சுருக்கத்தைத் தந்து விடைபெறுகிறேன்.

பார்வையைக் கொஞ்சும் பசும்பொன் னழகே;
ஊர்தொறும் அன்பை ஊட்டிய தாயே
இன்பத் தொட்டிலில் இட்டெனை யாட்டினை
தியான சுகத்தில் திளைத்திடச் செய்தாய்
உன்னை மறவேன்; உன்னவ ரான
என் னன்பர்கள் எவரையும் மறவேன்
அன்பை இங்கே அமர்த்திச் செல்கிறேன்
வருவேன் மீண்டும் வழிய னுப்புவாய்
வாழ்கவின் வளமை மரகதச் சோக்கே!

இரவெல்லாம் சாரிசாரியாக அன்பர் வந்தனர்—காலையில் கடவுளிசையுடன்—பாலும் தேனும் அருந்தி விமான நிலையம் சென்றோம்—இரண்டு மந்திரிகளும் உடன் வந்தனர். எட்டு மணிக்கு விமானம் ஏறினேன். அது பறந்தது. இதோ—பம்பாய்! பம்பாய் யோகேந்திரர் யோகாலயத்தில் சொற்பொழிவு நடந்தது. மறுநாள் சென்னை—

நான் எகிப்து, அல்ஜீரியா, காங்கோ முதலிய நாடுகளை முன்பே பார்த்து என் அனுபவங்களை "நாடோடி ராமன்" என்ற தொடர்கதையில் குறித்துள்ளேன்—

அன்பர் வாழ்க வாழ்கவே
　　அன்பு வாழ்க வாழ்கவே
இன்பமாக உலகுயிர்கள்
　　இனிது வாழ்க வாழ்கவே!

ஆப்பிரிக்கச் சுற்றுலா முற்றிற்று

———

அஃறிணை ஊமனும் கூகைக் கோழியும்

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.]

(முன் இதழ் தொடர்ச்சி)

" பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கின்
ஆண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி "

—பதிற்றுப்பத்து 25 : 8.

" ஆண்டலைக் கீன்ற பறழ் மகனே " —கலி. 94.

" கூகையோ டாண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி "

—திருவாலங்காட்டு மூத்த
திருப்பதிகம் - காரைக்காலம்மையார்

" ஊமைக் கூகையு மோரியு முறழ் கதிக்கும்
யாமத் திண்டிவந் தாண்டலை மாண்பில வழைக்கும் "

—நீலகேசி, தரும. 3.

ஆண்டலை என்ற ஆந்தைவகை யாது என்று அறியப் போதுமான விளக்கம் பாடல்களில் இல்லை. திருமுருகாற்றுப்படை உரையாசிரியர் ஒருவர் கோழி என்றே மயங்கிப் பொருள் கூறினர். ஆண் தலையைப்போல் உள்ள பறவையே ஆண்டலை யாகும். கோழிக்கு ஆடவர் தலைபோல தலை இல்லை ஆண்டலை என்பது;ஆடவரின் தலைக்குப் பெயராகும் என்பது தெய்வச்சிலையார் உரையில் விளங்குகின்றது. 'ஒரு மக்கட் டலையோடு காட்டுட் கிடந்தது கண்டு, பெண்டலை, ஆண்டலை யென்றுணராதான் பெண்டாட்டி தலைகொல்லோ, ஆண்மகன் றலைகொல்லோ, இதோகிடந்த மக்கட்டலையென்க, என்று கிளவி ஆக்கத்தில் உரை கூறப்பட்டுள்ளது. ஆதலின் ஆண்டலை ஆடவரின் தலையைக் குறித்தும் மண்டையோட்டைக் குறித்தும் வருமென்பது தெளிவாகும். ஆணின் தலைபோல உள்ள பறவை யாது என்று பறவை நூலறிவோடு ஆராய்ந்தால் அது ஆந்தை இனப் பறவையாகவே இருக்க முடியும் என்பது உறுதியாகின்றது. ஆந்தைகளின் முகம் மனிதர்களின் முகம்போலவும் குரங்கின் முகம்போலவும் இருப்பதாகப் பல பறவை நூலறிஞர்கள் கூறியுள்ளனர். ஆந்தையினத்துள்ளும் கூகைதான் சற்றுத் தட்டை முகத்துடன் மனிதருடைய தலை போலவே இருக்கும். ஆதலின் கூகையையே ஆண்டலை

யென்றழைத்தனர் என்று கருத வேண்டும். ஆண்டலை என்பது கூகையே என்பதற்குத் தக்கதொரு சான்றும் உள்ளது. திராவிட மொழிகளில் கூகைக்கு இப் பெயரே வழங்குவது முக்கிய சான்ருகும். கன்னட மொழியில் 'ஆண்டெக' என்ற பெயர் கூகையைக் குறித்து வழங்குகின்றது. கன்னடத்திலும் தெலுங்கிலும் 'ஆடெலு' என்ற பெயர் கூகைக்கு வழங்கு கின்றது. ஓர் ஆணை ஆடவன் என்று அழைப்பது போலவே ஆண்டலை என்பது ஆடெலு என்று அழைக்கப்பட்டது. தமிழில் வரும் ஆந்தை என்ற பெயரும் ஆண்டலையின் மரூஉவாக இருக்கலாம். ஆந்தையென்ற பெயர் முற்கால சங்கநூல்களில் வழங்காமல் பிற்பட்ட ஐந்திணை எழுபதில்தான் முதலில் வருவதைக் காணலாம்.

திருமுருகாற்றுப்படையில் ஆண்டலைக்கொடி என்பது தலையோட்டுக் கொடியாகவே இருக்கலாம். மலையாளத்தில் வெறியாட்டங்களில் இத்தகைய மனிதனின் மண்டையோடு பொறிக்கப்பட்ட கொடிகளை இன்றும் தொங்க விடுகின்றனர். பேய்களை வழிபடும் முறைகளில் இத்தகைய கொடிகளை (Death's head pennant) தொங்கவிடுவது மேல்நாடுகளிலும் காணும் வழக்கமாகும். பேய் முதலியன பலியை நுகராமல் தலை ஆண்மகன் தலையும் உடல் புள்ளின் வடிவுமாக எழுதிய கொடி என்று திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதிய நச்சினர்க்கினியர் கூறினது பொருத்தமானது. கொடியில் ஆந்தையின் உருவமும் வரையப்பட்டிருக்கலாம். ஏனென்ருல் பேயொடு கூகையைக் கூறுவது சங்ககாலத்திலிருந்து வழங்கிய மரபாகும்...லேப்சா (Lopcha) என்ற இமயமலைப் பழங்குடி யினரின் மொழியில் ஆந்தையின் பெயர் பேயைக் கூப்பிடும் பறவை என்ற பொருளில் வழங்குவதை இதுசார்பாகக் கவனிக்க வேண்டும்.

கலித்தொகையில் 'ஆண்டலைக்கீன்ற பறழ் மகனே' என்று கூறிய குள்ளனைக் கூனி அழைத்ததைக் காணலாம். ஆண்டலைக்குப் பெற்ற மகனே என்று கூறுவதன் காரணம் ஆராய்தற்குரியது. ஐரோப்பாவில் கூகையை அறிவு சான்ற ஞானியாகக் கருதும்போது இந்தியாவில் அதே பறவையை முட்டாளாகக் கருதுவதும் முட்டாளைக் கூகையின் மகன் என்று இழித்துக் கூறுவதும் வியப்புக்குரியதாகும் என்று ஒரு வெளி நாட்டுப் பறவை நூலறிஞர்* எழுதியிருக்கின்ருர். ஆண்டலைக் கீன்ற பறழ்மகனே என்று கலித்தொகையில் கூறியது குள்ளனை

*E.H.N. Lowther—A Bird Photographer in India.

முட்டாளென்று குறிக்கவே என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஞானசம்பந்தர் சமணரைத் திட்டிப் பாடியபோது 'கூகைஅம்மாக்கள்' என்று கூறியுள்ளார். சமணரைக் கூகை பெற்ற மாக்களாக, முட்டாள்களாக வசை பாடியுள்ளார். காரைக்காலம்மையார் மூத்த திருப்பதிகத்தில் 'முட்டைக்கூகை' என்று முட்டாள் கூகையாகக் கூறியுள்ளார். ஆனல் ஆந்தையை ஞானியென்று கருதும் எண்ணமும் தமிழிலக்கியத்தில் காண்கிறோம். ஆந்தையின் பெயர் இருடி என்று பிங்கலந்தை, சூடாமணி நிகண்டுகள் கூறுவதைக் காணலாம். மற்றும் சங்ககாலத்துப் புலவர்களின் பெயர்களாக ஓதலாந்தையார் என்ற பெயர் காணப்படுகின்றது. ஓதஞானியார் என்ற பெயரைக் கவனிக்கும்போது ஓதலாந்தையார் என்ற பெயர் ஆந்தையைப்போல ஞானியைக் குறித்ததாகக் கருதலாம். ஆந்தையை ஞானியென்றும் கூகையை முட்டாள் என்றும் பிரித்துக் கருதினர் என்றும் கொள்ளலாம். ''மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்'' என்று தொல்காப்பிய மரபியல் 622ஆம் சூத்திரம் கூறும். கோட்டான் என்ற பெயர் சங்கநூல்களில் வழங்கவில்லை. மரக்கோட்டை விடாமையான் கோட்டான் என்று பெயர் பெற்றதாகப் பேராசிரியர் கூறியுள்ளார். கோட்டான் என்ற பெயர் இன்று பாமர மக்களிடையே ஆந்தையினப் பறவைகளுக்குப் பெயராக வழங்குகின்றது. 'கோட்டானை மடியில் போட்டு சகுனம் பார்ப்பது போல' என்றொரு பழமொழி வழங்குகின்றது.

காரைக்காலம்மையார் பகண்டை என்றொரு ஆந்தையைக் குறிப்பிட்டுள்ளார். தமிழிலக்கியத்தில் வேறெந்தப் பாட்டிலும் இப்பெயரைக் காணேம். காரைக்காலம்மையார் பாடல்களில் ஊமன், கூகை, ஆந்தை, பகண்டை, சிறுகூகை என்று ஐந்து வகை ஆந்தையினப் பறவைகள் கூறப்பட்டுள்ளன.

" பருக்சோடு கூகை பகண்டை யாந்தை
குட்டியிட முட்டை கூகை பேய்கள் "

—திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்.

இப்பாட்டில் கூகை, ஆந்தை, பகண்டை என்று மூன்றுவகை ஆந்தைகள் குறிப்பிடப்பட்டுள்ளன, பகண்டை எந்த வகை ஆந்தை என்பது புரியவில்லை. பகண்டை என்ற பெயர் வேறு எந்த நூல்களிலும் வரவில்லை. திவாகர நிகண்டில் பகண்டை என்பதற்குப் பொருள் சிவல் என்று கூறப்பட்டுள்ளது. ஆனல் காரைக்காலம்மையார் கவுதாரியை மூத்த திருப்பதிகத்தில் கூறவில்லை என்பது தெளிவாகும். தெலுங்கு மொழியில்

'பகடிகண்டெ' என்று ஒருவகை ஆந்தைக்குப் பெயர் வழங்குகின்றது. தமிழ்நாட்டில் ஆந்தையென்று குறிப்பிடும் பறவையை (Spotted owlet) தெலுங்கில் 'பகடி கண்டெ' என்று அழைக்கின்றனர். அதுபோல காட்டில் வாழும் ஒருவகை ஆந்தையை (Barred Jungle owlet) 'அடவிபகடி கண்டெ' என்று அழைக்கின்றனர். மற்றொரு வகை காட்டு ஆந்தையை (Brown Hawk owl) தெலுங்கில் 'பகடி கண்டெ வெஷ்டம்' என்றழைக்கின்றனர். இந்த ஆந்தைகள் சிறியவை. ஆகையால் மூன்றுவகை ஆந்தைகளையும் சின்ன ஆந்தை என்று தமிழிலும் புள்ளுநத்து என்று மலையாளத்திலும் அழைக்கின்றனர். பகடிகண்டெ என்ற பெயர் சுருங்கினால் பகண்டை என்று வரும்.

தமிழில் பகண்டை என்ற ஆந்தைப் பெயர் அவ்வாறு வந்திருக்கலாம். பகடிகண்டெ என்பதற்குத் தெலுங்கில் பொருள் பகலில் காண்பது என்பதாகும். பொதுவாக ஆந்தை இனப் பறவைகளைப் பகற்குருடு என்பர். கூகை 'கடும்பகல் வழங்கா தாஅங்கு' என்று அகநானூற்றில் (122) வருகின்றது. ஆனால் சிலவகை சின்ன ஆந்தைகள் பகலில் பார்த்திடும் சக்தி வாய்ந்தவை. பகலிலேகூட வெளியே வரும். ஆதலின் பகலில் காண்பது என்ற பொருளில் பகடிகண்டெ என்ற தெலுங்குப் பெயரும் பகண்டை என்ற தமிழ்ப்பெயரும் தோன்றியிருக்கலாம். பகண்டை என்ற தமிழ்ப் பெயர் பகடி என்ற சொல்லடிப்படையாகவும் தோன்றியிருக்கலாம். பகண்டி என்பது பகடி என்று வரும். பகடி என்பதற்குச் சிரிப்பை மூட்டுவது, வேடம் போடுபவன், பரிகாசம் செய்பவன் என்பன பொருளாகும். சிலவகை சிறிய ஆந்தை பொந்தில் இருந்து எட்டிப் பார்த்து முகத்தைத் திருப்பிச் செய்யும் செயல்கள் நகைப்பையும் சிரிப்பையும் தரும் என்று பறவை நூலார் கூறுவர்.

ஆதலின் இதே பொருளின் அடிப்படையில் பகண்டை என்ற பெயர் தோன்றியிருக்கலாம். "பப்பினை இட்டு பகண்டை பாட" என்று மூத்த திருப்பதிகத்தில் காரைக்காலம்மையார் கூறியுள்ளார். இங்கு பகண்டை என்பதற்கு விகடப்பாடல் என்று சிலர் பொருள் கொண்டனர். ஆனால் பகண்டை என்று காரைக்கால்லம்மையார் கூறியது விகடத்தையும வேடத்தையும் பரிகாசத்தையும் தரும் ஒருவகை ஆந்தையையே என்பதை உணர வேண்டும். 'பப்பினை இட்டு' என்ற தொடரில் பப்பு என்பது இகழ்ச்சிக் குறிப்பாக வரும். பப்பு என்பது ஒப்பு

என்ற பொருளில் திருவாசகத்திலும் வருகின்றது. பகண்டை வேடம் போடுவதாகவும் இகழ்ச்சிக் குறிப்பைத் தருவதாகவும் அம்மையார் குறிப்பிட்டுள்ளார். வேறு யாரும் கூருத ஒரு வகைக் காட்டு ஆந்தையை அம்மையார் கூறியதைக் கவனிக்க வேண்டும். ஒருவகைக் காட்டு ஆந்தையையே 'கூகைக் கோழி' என்று குறுந்தொகையும் கூறியதைக் காணலாம். 'சிறு கூகை உட்க விழித்த' என்றும் அம்மையார் கூறியது சின்ன ஆந்தையைக் குறித்ததாகக் கருதலாம்.

ஆந்தையினப் பறவைகளின் பெயர்களாகச் சங்கநூல்களிலும் பிற நூல்களிலும் கூகை, குரால், குடிஞை, ஊமன், ஆண்டலை, கூமை, ஆந்தை, பகண்டை என்ற பெயர்கள் வருகின்றன. இப்பெயர்கள் திராவிட மொழிகளில் வேறு உருவில் வழங்குகின்றன. இப்பெயர்கள் குறிக்கும் ஆந்தை வகை எது என்று தெரிந்து கொள்ள பிற திராவிட மொழிகளில் காணும் பெயர்களே உதவுகின்றன என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஆதலின் சங்ககால விலங்கு, பறவை, மரஞ்செடிகொடிகளின் பெயர்களை ஆராய்ந்து கண்டறியத் திராவிடமொழிகளின் பெயர்களை ஒப்பிட்டு ஆராய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

—

சீர்திருத்தம் தேவை

"காலங்கடோறும் தொடர்ந்து நிகழும் மாறுதல்களை நன்காராய்ந்து பார்த்து, அவற்றிற்கேற்ப நமது வாழ்க்கையின் பழைய நிலைகளை அறவே யொழித்தோ அல்லதவற்றுட் சீர்திருத்தற் பாலனவற்றைச் சீர்திருத்தியோ ஒழுகினலன்றி மக்கள் வாழ்க்கை இனிது நடவாது."

—மறைமலையடிகள்
'தமிழர் மதம்' பக். உ௩௦

மருந்துப்பெயர் இலக்கியங்கள்

[புலவர் பெ. மூனியப்பன்]

(முன் இதழ் உகூசு ஆம் பக்கத் தொடர்ச்சி)

மண்டலம்

இனி, இதனை இவ்வாறு எத்தனை நாட்கள் உண்ண வேண்டுமெனில், ஒரு மண்டலம்—அதாவது 49-நாள்கள் உண்ணவேண்டும். சிலர் ஒருமண்டலம் என்பது 40-நாள்கள் என்றும், மற்றுஞ் சிலர் 48-நாள்கள் என்றும் கூறுவர். ஆனால், ஒரு மண்டலம் என்பதற்கு 49 நாள்கள் எனக் கொள்வதே சரியானதாகும்.

எவ்வாறெனில், ஏழு நாள்கள் கொண்ட கிழமைகள் (வாரங்கள்) ஏழு கொண்டதுதான் ஒரு மண்டலமாகும். மேலும், இம்மண்டலமென்ற சொல்லைச் சிறிது எண்ணிப் பார்த்தாலே இதன் உண்மை புரியும். மண்டலம் என்பது ஒரு பெரு நாட்டின் சிறிய உட்பிரிவைக் குறிப்பதற்கே பண்டு தொட்டு இன்றுவரை வழங்கப்பட்டு வருகிறது. கடலுள் மூழ்கிய குமரிக் கண்டத்தில் ஏழு மண்டலங்கள் கொண்ட வள நாடுகள் ஏழு இருந்தன. அதாவது 49-மண்டலங்கள் இருந்தன.

மேலும், இக் குமரிக் கண்டத்தில் திகழ்ந்த முதலிரு தமிழ்க் கழகமும், இன்றைய மதுரையில் திகழ்ந்த மூன்றும் தமிழ்க் கழகமும் ஒவ்வொரு முறையும் 49-புலவர்களை அரங்கேற்றி வந்தது. இன்னும், இதுபோன்ற சான்றுகள் சிலவற்றையும்; சித்த மருத்துவம் என்னும் தமிழ் மருத்துவம் குமரிக் கண்டத் தமிழர்களிடத்தில் தோன்றிய தொன்மை யுடையது என்பதையும் மனத்தில் இருத்தினுல் ஒரு மண்டலம் என்பதற்கு 49-நாள்கள்தான் என்ற உண்மை ஐயமறத் தெளிவாகும்.

காலவரையறை

அடுத்தபடியாக, ஒருவர் தம் வாழ்நாளில் இம்மருந்தை ஒரு மண்டலம் உண்டால் போதுமா? என்ற வினு எழும். அதற்குப் போதாது என்பதே விடை. என்ருலும், ஒருவரின் உடல்தன்மை, நாடி, உழைப்பு ஆகியவற்றைக் கொண்டுதான் முடிவு செய்யவேண்டும். எனினும், பொதுக் கருத்தாகக் கூறி

ஞல் ஆண்டுக்கு ஒரு மண்டலம் உண்பது சிறப்பாகும். இதே மருந்தை ஆண்டுதோறும் உண்ணவேண்டு மென்பதில்லை. சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்ற வருமுன் காக்கும் மருந்து களை மாற்றி மாற்றி ஆண்டுதோறும் உண்டு வந்தால்; பற்றவரும் பல்வகைப் பிணிகளினின்றும் இவை நம்மைப் பாதுகாக்கும். இனி இரண்டாவதாக உள்ள சிறுபஞ்சமூலத்தைப் பார்ப்போம்.

சிறுபஞ்சமூலம்

மருந்தாக்கம்: சிறுபஞ்சமூலம் என்பதற்குச் சிறிய ஐந்து வேர்களால் ஆன மருந்து எனப் பொருள். அவ்வைந்து வேர்களாவன 1. கண்டங்கத்தரி வேர். 2. சிறுவழுதுணை வேர். 3. நெருஞ்சி வேர். 4. சிறுமல்லி வேர். 5. பெரு மல்லி வேர். இவ்வைந்தும் நம் நாட்டில் எங்கும் கிடைப் பவை. இவ்வைந்து வேர்களையுஞ் சேகரித்து நன்ருக உலர்த்தி, காய்ந்தபின் இடித்துத் தூளாக்கி, மெல்லிய துணியால் வடிகட்டவேண்டும். பின் ஒவ்வொன்றையும் சம அளவு எடுத்து ஒன்ருகக் கலந்து கொண்டால் இதுவே சிறுபஞ்ச மூலம் என்ற மருந்தாகும். முக்கடுகத்திற்குக் கூறப்பட்ட உண்ணல், அளவு போன்ற எல்லா முறைகளையும் அப்படியே இதற்கும் கொள்க.

ஏலாதி

மருந்தாக்கம்: ஏலாதி என்பதற்கு ஏலத்தை முதலாகக் கொண்ட மருந்து என்பது பொருள். இதன் பெயர் இவ்வாறு அமைவதால் எத்தனை பொருள்கள் இதில் சேரும் என்பது வரையறுக்கப்படவில்லை. ஏலத்தோடு இருபது முப்பது பொருள்களைச் சேர்த்தும் இம்மருந்தை ஆக்குவதுண்டு.

எனினும், பொதுவாக ஏலம், இலவங்கம், சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்ற ஆறு பொருள்களால் ஒரு முறை யும்; ஏலம், இலவங்கம், சிறுநாகபபூ, தாளிசபத்திரி, கூகைநீர், சுக்கு, மிளகு, வெல்லம் என்ற எட்டுப் பொருள்களால் ஒருமுறை யும்; ஏலம், இலவங்கப், சிறுநாகப்பூ, நற்சீரகம், மரமஞ்சள், விலாமிச்சவேர், கார்கோலரிசி, கடுக்காய், முத்தக்காசு, நெற் பொரி, பெருங்காயம், தேன் என்ற பதினெரு பொருள்களால் ஒருமுறையும் இம்மருந்து ஆக்கப்படுகிறது. இதனை ஆக்கும் முறைக்கும் உண்ணும் முறைக்கும் பிறவற்றிற்கும் முக்கடுகத் திற்குக் கூறப்பட்டதை அப்படியே இதற்கும் கொள்க.

ஆய்ந்து அமைத்த பெயர்

மாண்பயன்கள் பலகொண்ட இம்மருந்தின் பெயர்களே நூலுக்கு இடப்பட்டது என்பதில் ஐயமில்லை. என்றாலும், திரிகடுகத்தின் முதற்பாடலில் வந்த திரிகடுகம் என்ற சொல்லே சிறப்பு நோக்கி இந்நூலுக்கு வைக்கப்பட்டது என்றும் கூறுவர். ஆனால், இப்பாடலில் இப் பெயர் வந்ததால் மட்டுமே இப்பெயர் சூட்டப் பெறவில்லை. ஏனெனில், இந்நூலில் வரும் ஒவ்வொரு பாடலும் திரிகடுகம் போல மும்மூன்று கருத்துக்களையே மொழி கின்றது. முக்கடுகத்தில் காப்புப் பாடல் ஒன்று நீங்கலாக 100 பாக்கள் உள்ளன. இதில், 'இம்மூன்றும்' என 59 பாடல் களிலும், 'இவைமூன்றும்' என 7 பாடல்களிலும், 'இம்மூவர்' என 31 பாடல்களிலும், 'இவர் மூவர்' என 3 பாடல்களிலும் வந்துள்ளன. எனவே, திரிகடுகம் என்ற பெயர் நூல் எழுது முன் திட்டமிட்டே இயற்றப் பட்டுள்ளதேயன்றி, ஒருபாடலில் திரிகடுகம் என வந்ததால் இப்பெயர் வைக்கப்படவில்லை.

இதுபோன்றே சிறுபஞ்சமூலமும், ஏலாதியும் ஆம். ஏனெனில் சிறுபஞ்ச மூலத்தின் ஒவ்வொரு பாடலும் ஐந்தைந்து கருத்துக் களைக் கொண்டது. இன்று சிறுபஞ்ச மூலம் நமக்கு முழுமை யாகக் கிடைக்கவில்லை. மூன்று பாடல்கள் ('அச்சமேயாயுங் கால்'... ; 'கைம்மாறுமச்சமுங்'... ; 'இம்மை நலனழிக்கு'... எனத் தொடங்கும் பாடல்கள்) புறத்திரட்டால் கிடைத்துள் ளன. இன்றுவரை கிடைத்திருப்பவை கடவுள் வாழ்த்துப்பாடல் ஒன்றும், இறுதியில் உள்ள பாயிரப் பாடல் ஒன்றும் நீங்கலாக 96 பாடல்களே. இவற்றில் முக்கடுகத்தைப் போல் எல்லாப் பாடல்களும் தொகு எண் பெற்று வரவில்லை, 'ஐந்தும்' என 9 பாக்களிலும், 'ஐவர்' என 2 பாக்களிலும் 'ஐம்பால்' என ஒரு பாவிலுமே தொகு எண் வந்துள்ளது. பிற பாடல்களில் இவ்வாறு ஐந்து என்ற எண் பெயர் வரவில்லையானாலும், ஒவ் வொரு பாடலும் ஐந்தைந்து கருத்துக்களையே கூறுவதால், இந்நூலின் பெயரும் முதலிலேயே திட்டமிட்டே இயற்றப்பட் டுள்ளது என்பதில் ஐயமில்லை.

இனி, மூன்றாவதாக உள்ள ஏலாதி என்ற மருந்தில் சேர்வன எத்தனை பொருள்கள் என்பது வரையறுக்கப்பட வில்லை. எனவேதான், ஏலாதி நூலில் எப்பாடலிலும் தொகு எண் வைத்துப் பாடப் பெறவில்லை. என்றாலும், ஏலாதி என்னும் மருந்து 6 பொருள்களைக் கொண்டே பெரும்பாலும் ஆக்கப்படுவதால் மொத்தம் உள்ள 80 பாக்களில் (கடவுள் வணக்கப் பாடல் ஒன்றும், சிறப்புப் பாயிரப் பாடல் ஒன்றும்

நீங்கலாக) 58 பாக்கள் ஆறு கருத்துக்களைக் கொண்டுள்ளன. ஏழு கருத்துக்கள் அடங்கிய பாடல்கள் 11 உள்ளன. குறிப்பிட்ட ஆறு பொருள்களுடன் கண்ட சருக்கரையையுஞ் சேர்த்து இம்மருந்தை ஆக்குவதுண்டு என்பதால் ஏழு கருத்துக்களின் அடிப்படையில் 11 பாடல்கள் அமைந்துள்ளன எனக் கருதுகின்றேன்.

மீதமுள்ள 11 பாடல்களும் ஆறு கருத்துக்களுக்குக் குறைவான கருத்துக்களையே மொழிகின்றன. ஆனால், ஒவ்வொரு பாடலையும் ஆய்ந்து அக்கருத்துக்களை விளக்குகையில் அது ஆறும், ஆறுக்கு மேற்பட்ட கருத்துக்களையும் தரும். எனவே, இம் மருந்துப் பெயர்கள் மூன்றும் திட்டமிட்டே நன்கு எண்ணி ஆய்வு செய்தே இந்நூல்களுக்கு இடப்பட்டுள்ளன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

என்ன பயன் இதனால்?

இத்துணையளவு ஆராய்ந்து மருந்துப் பெயர்கள் திட்டமிட்டே இந்நூலுக்கு இடப்பட்டுள்ளன என்பதைக் கண்டோம். அடுத்து, என்ன பயன இப்பெயர்களால் என்ற வினா எழுதல் இயல்பே. அதனையும் மொழிந்தால்தானே இவ்வாய்வு முழுமை பெற்றதாகும். எனவே, இப்பெயர் விளைவிக்கும் பயனைப் பார்ப்போம்.

அறிவுடைமை என்னும் அதிகாரத்தின் முதற் குறளிலேயே வள்ளுவர், 'அறிவு அற்றங் காக்குங் கருவி' என்றும்; இக் குறளிலேயே, 'செறுவார்க்கும் உள்ளழிக்கலாகா அரண்' என்றும் எவ்வளவு அருமையாகக் கூறியிருக்கின்றார்!

நமக்கு அழிவு வாராமல் காப்பதும், பகைவரால் அழிக்க இயலாதிருப்பதுமாகிய ஒரே கருவி அறிவு என்று சொல்கிறார். அந்த அறிவைத் தருபவை நூல்கள். அறிவு தரும் சிறந்த நூல்களைக் கற்றபின்னும்; நம்மை நொந்து போகச் செய்யும் நோயும், எவ்வகையிலும் இயங்க விடாது பிணித்துக் கட்டும் பிணியும் நம்மை ஆட்கொண்டால் நாம் பெற்ற அறிவால என்ன பயன்? இதனை நன்கு நமக்கு உணர்த்தவும், எடுத்துக் காட்டவுமே வருமுன் காக்கும் மருந்துப் பெயர்களை இலக்கியப் பெயர்களாக்கிப் பிணியற்ற நனிவாழ்வு வாழும் வழியைக் காட்டியுள்ளனர் அம்மேன்மைத் தமிழ்ப் புலவர்கள்.

முடிவிடம்

இன்னும் 'எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை, அதிர வருவதோர் நோய்' என்ற குறளை வள்ளுவர் பொதுவாகவே மொழிந்திருந்தாலும், வருமுன் காக்கும் இம் மும்மருந்துப் பெயர் இலக்கியங்களோடு—அறிவு நூல்களோடு இணைத்துப் பாருங்கள். இதனை இணைத்து எள்ளளவேனும் எண்ணிப் பார்ப்பவர்கள் இப்பெயரமைத்த பெருமையினைக் கண்டு இறும்பூதடையாதிருக்கமாட்டார்கள். எனவே, பெயரில் என்ன உள்ளதென்று பிதற்றித் திரியும் பேதைகள் பெருகிவிடாமலிருக்க இடத்திற்கும், நூலிற்கும், இன்னபிற யாவற்றிற்கும் பொருந்தும் பெயர்களை வைத்துப் புகழ் விளைப்போமாக.

மும்மருந்து

(கடுகம், மூலம், ஏலாதி)

கழகத்தின் அறநிலையங்களுள் ஒன்றாகிய தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திருநெல்வேலிச் சந்திப்பு தருமபுர மடத்தின்கண் 12—2—1956 இல் சித்தாந்த கலாநிதி வித்துவான் ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'பதினெண்கீழ்க் கணக்கு' மாநாட்டில் கணியர் புலவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'மும்மருந்து' என்னும் பொருள் பற்றி ஆற்றிய சொற்பொழிவுக் கட்டுரையினைப் பதினெண் கீழ்க் கணக்குச் சொற்பொழிவுகள் என்ற நூலின்கண் காண்க. அதனைப் புலவர் பொ. முனியப்பனவர்கள் கட்டுரையுடன் தொடர்புபடுத்திக் கற்றுணர்க.

வ. சு.

மழையே வா!

வள்ளலார் திருவருள் மண்டபத்தில் 9—3—75 காலை, மாலை இருவேளைகளிலும் மழை வேண்டிய இசை விழாவினைத் தருமை அருள்பெரு சமயச் சொற்பொழிவு நிலையத்தின் தலைவர் தவத்திரு மகாலிங்கத் தம்பிரான் தொடங்கி வைத்தனர் ஓதுவா மூர்த்திகள் பதின்மரும், இசைச் செல்வியர் நால்வரும், தவயோகி சுத்தானந்த பாரதியாரும் இசை முழக்கஞ் செய்தனர். உயர்நீதிமன்ற நடுவர் மாண்புமிகு மகராசன் அவர்கள் 'மழையே வா! என்ற நூலை வெளியிட்டுப் பாராட்டிப் பேசினர். முழுவிவரமும் படங்களுடன் அடுத்த பரலில் வெளியிடப் பெறும்.

காமாட்சி தாசன் பேராசிரியர்
இ. எஸ். வரதராஜையர்க்கு
21—10—74ல் நிகழ்ந்த வயிர விழாவில்
திருவான்மியூர் டாக்டர் சாமிநாதையர்
நூலகர் மு. கோ. ராமன் பாடிய

வாழ்த்து

1. செய்ய தமிழில் பெரும்புலமை
திகழச் சிற்றம் பலமிளிரும்
துய்ய அண்ணு மலையரசர்
தோமில் கல்விக் கழகத்தே;
வையம் சிறக்கத் தமிழ்வளர்த்த
வரத ராஜப் பேராசான்
தெய்வக் கவிஞன் சிறப்பெல்லாம்
சிறியேன் வகுத்தற் கியலுமோ.

2 தொல்காப் பியமாம் தமிழ்த்தொன்மை
துலங்கும் நூலின் வளம்தோய்ந்து
பல்காற் பயின்றே உலகமெல்லாம்
பரிவோ டந்நூற் சுவையுணர
அல்காப் புகழ்சேர் ஆங்கிலத்தில்
ஆக்கியளித்த பெருந்தகையாம்
பல்காப் பியங்கள் பலபகர்ந்த
பனவன் வரத ராஜையன்.

3. சொல்லும் பொருளும் சுவையொழுகத்
தூய தமிழில் பலகவிதை
கல்லும் கனியக் கற்கண்டும்
கசக்கப் பாடும் பெருங்கவிஞன்
புல்லும் பிறவிக் கடல்கடக்கப்
போந்த புணையாக் காஞ்சிவரு
நல்ல சங்கரா சாரியார்
நற்றுன் பரவு மெய்ச்சீடன்.

4. உலக அரங்கில் தமிழ்மகட்கே
உரிய தானம் தாபித்தே
விலக லில்லாப் புகழார்ந்த
விமலன் சாமி நாதப்பேர்
இலகும் தமிழ்நூற் கோயிற்கண்
எம்மான் கம்பன் நூற்பதிப்பைத்
திலக மாக முற்றுவித்த
திறலான் வரத ராஜையன்.

5. எண்ப தாண்டு நிறைவுவிழா
இனிதே காணும் செயலுணர்ந்தெம்
பண்பதார்ந்த பெரும் புலவ
பாரில் வளங்கள் பலபெற்றே
நண்பர் சுற்றம் மற்றுமுள்ளோர்
நாளும் போற்றப் பல்லாண்டு
கண்ப டாத பெருவாழ்வு
கவின வாழி வாழியே.

6. ஒன்றும் அறியேன் காந்தியின்மேல்
உரைத்த பிள்ளைத் தமிழ்கேட்டே
நல்ல மடிய நாவுவக்கும்
அன்பால் எளியேன் தமிழினையும்
நன்று நன்றென் றேகூறி
நயந்தோர் பாட்டில் அளித்தகுணக்
குன்றே அனையாய் நன்றியுடன்
கூறும் வாழ்த்தும் ஏற்றருளே.

7. இறைவன் அருளும் எழிற்காஞ்சி
இலகு காமகோடி பிரியர்
நிறையும் பீடத் தணிபுரியும்
நிமலன் அருளும் கூடிநின்றே
பிறையா யிரமும் கண்டுவக்கும்
பீடார் வரத ராஜப்பேர்
மறையோன் சரணம் திசைநோக்கி
வணங்கி நாளும் உய்குவமே.

———

ஆட்சிமொழித் துணுக்குகள்

(1) & Co = & கோ

(கீ. இராமலிங்கனர், எம். ஏ.

தமிழக அரசின் ஆட்சிமொழிக் குழு உறுப்பினர்)

"& Co" என்று ஆங்கிலத்தில் எழுதுவதை "& கோ" என்று தமிழில் எழுதிக்கொள்ளலாம்.

'&' இஃது ஆங்கிலம் அன்று. ஒரு சொல்லேயும் அடுத்த சொல்லேயும் இணைக்கும் அடையாளம் '+' '—' '÷' போன்றது. எந்த மொழியிலும் பயன்படுத்தலாம். ஆங்கிலத்தில், இந்த '&' அடையாளத்தை "And" என்று உச்சரிக்கிரேம். தமிழிலும் இதனை 'அண்டு' என்றே உச்சரிக்கலாம். 'அண்டு' நல்ல தமிழ்ச் சொல். அண்டுதல், அண்டை, அண்டினுன், அண்டிய முதலிய சொற்களே நாம் அறிவோம். அண்டு என்பதைச் சுருக்கி 'அண்' என்று சொன்னுலும் 'அண்டு'க்கு இருக்கும் பொருளே அதற்கும் உண்டு. ஆங்கிலத்தில் 'And' என்பதை 'அண்டு' என்பதில்லே. 'அண்' என்றே உச்சரிக்க வேண்டும் என்பதை ஆங்கிலம் அறிந்தார் அறிவர்.

முருகன் & கோ என்பதை முருகனே அண்டிய கோ என்று விரிக்கலாம். முருகன் ஒரு வணிகத்தின் முதல்வர். அவரை அண்டிச் சிலரோ பலரோ அவ் வணிகத்தில் கூட்டுச் சேர்ந்திருக்கின்றனர் என்பதைக் குறிப்பதற்கே 'முருகன் & கோ' என்போம். கூட்டுச் சேர்ந்திருப்பவர்களேக் கூட்டாளிகள் என்பர். அவர்கள் சேர்ந்து நடத்தும் வணிகத்தைக் கூட்டு வணிகம் என்பர். ஒரு வணிகத்தைச் சுட்டிக் காட்டி 'இதில் முருகனும் திருமாலும் கூட்டு' என்பது போன்ற தொடர்களேக் கேட்டிருக்கிரேம். 'கூட்டு' என்பதைக் 'கூ' என்னும் ஓர் எழுத்தால் குறிக்கலாம்.

இங்ஙனமாக '& கூ' என்பதுதானே. '& Co'க்குத் தமிழ் வடிவமாக அமையலாம். '& கோ' எங்ஙனம் பொருந்தும் என்னும் வினு எழும். '& கூ' என்று சொல்வது பொருத்தமாகத் தானிருக்கும். ஆனல், '& கோ' என்பது, ஆங்கில '& Co'க்கு ஓசையில் ஒத்திருக்கிறது. அது நமக்குப் பெரிது அன்று. 'கோ' என்பது 'கோட்டி' என்பதன் சுருக்கம். கோட்டி

என்றாலும் 'கூட்டம்', 'கூட்டு' என்றாலும் ஒன்றே. ஒரு கோட்டுக்குட்பட்ட இடத்தைக் கோட்டம் என்கிறோம். ஒரு செயலைப் புரியும் சிலரை ஒன்று சேர்த்துக் குறிக்கக் 'கோட்டி' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம். 'கோடு' என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டே 'கோட்டம்' 'கோட்டி' போன்ற சொற்கள் அமைகின்றன.

'& கூ'-ம் '& கோ'-ம் ஒன்றே. இரண்டும் ஒரே கருத்தைக் குறிக்கின்றன. இவ்விரண்டுள் '& கோ' என்பது ஆங்கில 'Co கோ'வின் ஓசையை ஒத்திருப்பதனால், அந்த ஆங்கில ஓசையைச் சில காலமாகக் கேட்டுக் கேட்டுப் பழகியவர்களுக்கு எளிதாகவும் இருக்கும்.

எனவே '& Co'க்கு நல்ல தமிழ்ப் படிவமாக '& கோ' அமைவதை உணரலாம்.

———

ஆரிய மாயையால் விளைந்த இடர்ப்பாடு

இவ் விந்திய நாட்டில் அரசினை நடத்துதற்கு உதவியாய் நிற்பாரிற் பெரும்பாலார் ஆரிய முறையைத் தழுவிய பார்ப்பனராயும் அவர் சொல்வழி நடப்பவராயும் இருத்தலால் சைவ சமய வளர்ச்சிக்குந் தமிழ் வளர்ச்சிக்குந் தமிழ் உணர்ந்தார் செலவிற்கும் அரசினரிடமிருந்து உதவி பெறுதல் இயலாததாயிருக்கின்றது.

— *மறைமலையடிகள்*

(*மறைமலையடிகளார் அறிவுரைக் கோவை, பக் 200*)

பாப்பரணை, பார்ப்பார அரணையா?

[கு. பூங்காவனம் க. மு.]

'செல்வி', சிலம்பு ௪௬, பரல் ௮ இல் அறிஞர் பி. எல். சாமி என்பார் 'பாப்பரணை' என்னும் பெயரிய கட்டுரை யொன்றினை வரைந்திருந்தார். அக் கட்டுரையிற் கண்ட பொருந்தாப் புலனமொன்றை விளக்குவான் புகுகின்றேன்.

ஆரியரும் அவர்வழிப்பட்டாரும், பிராமணன் சத்திரியன் வைசியன் சூத்திரன் 'அந்தண அரச வணிக வேளாளர் என்னும் தொழில் வழிப் பாகுபாடன்று) என்று பிறப்பிலேயே மாந்தரைப் பிரித்து ஏற்றத்தாழ்வு கூறினர் என்பதுடன் பறவை விலங்கு முதலியனவற்றையும்,

பிராமணக் கழுகு - பறைக்கழுகு

பா(ர்)ப்பார மைனு

பிரமா (பிராமண) மாடு

பறை நாய்

எனப் பிரித்த (பிற்கால) வழக்குகளுண்மையையும், அவ்வாறே நால்வகைப் பாக்களையும் நாற்பிரிவு மக்களுக்கென்று பகுத்தனர் என்பதையும், யான் மறுக்கப் புகுகின்றேன் அல்லன்.

தமிழ் (திரவிட) வழக்கிலிருந்து பிற இந்திய மொழி களுக்குச் சென்று வழங்கும்,

கறக (கறை - நஞ்சு)

கோங்கெலி (கோங்கிலவு)

முதலான வழக்குகளும், இன்னும் பாலை, நந்துநாரை, குருகுபெடை முதலியவற்றின் மொழிபெயர்ப்பாகவே பிற மொழி களில் அவற்றின் பெயர்கள் உள்ளன என அக் கட்டுரை யாசிரியர் வரைந்துள்ளமையிலும் மாறுபடுகில்லேன்.

ஆயின், பிற்கால வழக்குகளான பா(ர்)ப்பார மைனு, பிரமா பாடு முதலியன போலவே பாப்பரணை யென்பதும் பார்ப்பார அரணை என்னும் பொருளினதுவே என ஆசிரியர் கூறுவது உண்மையாகாது.

பாப்பரணை, பார்ப்பார அரணையல்ல வென்பதற்கு யான் கூறும் காரணங்களாவன :

(க) வான்மீகி இராமாயண காலத்திலேயே பிறப்பால் மாந்தரை நால்வகைப் பாகுபாடாகத் தமிழர் பிரித்திற்றிலர். அவ்வாறிருக்க, பறவை விலங்கு முதலியனவற்றையும் அக் காலத்திலேயே பார்ப்பார அரணை என்பதுபோற் பெயரிட்டு வழங்கினர் என்பது உண்மையாகாது.

(௨) ஆரியர், தமிழருடன் கொண்ட தொடர்பினாலேயே தமிழகத்தில் 'வருணாசிரம' முறை தோன்றலாயிற்று என்பதுவே உண்மையாம். அவ்வாறிருக்க, ஆரியத் தொடர்பு தமிழகத்தில் நன்கு வேரூன்றாத காலத்திலேயே தமிழகத்தில் பார்ப்பார (பிராமண) அரணை எனப் பிற உயிர்களையும் பாகுபாடு செய்யும் முயற்சி தமிழகத்தே நிலவி அவ் வழக்கு வான்மீகி இராமாயணத்தில் இடம் பெற்றது என்பது பண்டைத் தமிழரின் பகுத்தறிவை முரண்படுத்துவதாம்.

(௩) பாப்பரணை என்பதைப் பார்ப்பார அரணை என்னும் பொருளிலோ, பிரமா மாடு பா(ர்)ப்பார மைனா என்னும் வழக்குகளோ, யானறிந்தவரை பண்டைத்தமிழ் இலக்கியங்களில் இடம்பெறவில்லை.

எனவே பாப்பரணை என்பது பார்ப்பார அரணை அல்லவென்பது தெளிவாம். ஆயின் பாப்பரணை என்பதன் பொருள்தான் யாது ? என்ற வினாவிற்கும் விடையிறுக்கும் கடப்பாடுடையேன்.

''அவற்றுள்
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை''
(தொல். பொருள். மரபியல் 4)

''தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன''
(தொல். பொருள். மரபியல் 5)

எனவே 'பார்ப்பு' என்னும் சொல் பறப்பனவற்றிற்கும், தவழ்வனவற்றிற்கும் ஆன இளமைப் பெயர் என்பதாம்.

'பார்ப்பு' என்பது பறப்பன தவழ்வனவற்றின் இளமையையே குறிப்பதனை,

"வெள்ளாற் பமனந் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப் - புள்ளினந்தம்

கைச்சிறகால் பார்ப்பொடுக்குங் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு''

என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுளானும் அறியலாம்.

பார்ப்பு என்னும் தமிழ்ச் சொல்லே இன்று. பாப்பு, பாபு, பாபி, Babe, Baby ஆகிய வடிவங்களுடன் பிற மொழிகளிலும் இளமைப் பொருளிலேயே வழங்குகின்றது.

பார்ப்பு என்னும் இளமையடைப்பெயருடன் அரணை என்னும் பெயர் சேர்ந்து பாப்பரணை என்றாயிற்று. பாப்பரணைக் கட்டுரையாசிரியரின் கீழ்க்காணும் கூற்றே இதற்குச் சான்றாம்.

''பிராமணி என்ற வடமொழிப் பெயருக்குக் கூறிய உரையில இதற்கு (பாப்பரணைக்கு) இரத்தபுச்சம் இருப்பதாக, அஃதாவது இரத்த நிறமுடைய வால் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அரணையின் குட்டிக்கே இத்தகைய வாலிருப்பதைப் பார்த்திருக்கலாம். பெரிய அரணைக்கு இந்த வகையான வால் இருப்பதில்லை தமிழ் நாட்டு வழக்கிலும் பெரிய அரணையைப் பாப்பரணை என்றழைப்பதில்லை. அரணையின் குட்டியையே பாப்பரணை என்றழைக்கின்றனர்.''

(செல்வி ௪அ, பரல் அ, பக்கம் ௪௨௧)

எனவே, குட்டி அரணையையே தமிழர் பாப்பரணை என்று குறித்தனர் என்பதும், தமிழில் வழங்கிய பார்ப்பு என்ற இளமைப் பொருட் பண்புப் பெயர் அடையையே அக்கால வடமொழி வாணர்,

பார்ப்பு - பிராமண
(பாப்பரணை - பிராமணி)

எனத் தடுமாற்றமாக மொழி பெயர்த்துக் கொண்டனர் என்பதும், இவ்வாறு மொழி பெயர்த்துக் கொள்ளுதல் அக்கால ஆரியக் கரவுகளுள் ஒன்று என்பதும் தெளிவாம்.

ஆகவே, பாப்பரணை என்பது பா(ர்)ப்பார மைனா, பிரமா மாடு என்பவை போலப் பார்ப்பார அரணை என்னும் பொருளதன்று; குட்டி அரணையே என்பதாம்.

திரு. சை. வே. சிட்டிபாபு, எம்.ஏ., பி.டி., மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரானார்

சிறந்த வரலாற்றறிஞரும் ஆற்றொழுக்கான அழகு நடையில் ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் சொற்பெருக்காற்ற வல்லவரும் தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்குநருமான திரு. சை. வே. சிட்டிபாபு, எம்.ஏ , பி.டி , அவர்கள் அண்மையில் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றமை அறிந்து பெருமகிழ்வெய்துகிறோம். பேரறிஞர் டாக்டர் மு. வ.விற்குப் பின் அவர் வகித்து வந்த துணைவேந்தர் பொறுப்புக்குத் திரு. சிட்டிபாபு அவர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் தமிழக அரசு நல்லதொரு பணியைக் காலத்தே செய்துள்ளது என்று குறிப்பிடலாம். கல்வித் துறையில் நீண்டதொரு பணியைச் செய்து ஆயிரக் கணக்கான பள்ளி களையும் நூற்றுக் கணக்கான கல்லூரிகளையும் இயக்குநர் பொறுப்பிலிருந்து திறம்பட இயக்கிய திரு. சிட்டிபாபு அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் சிறந்த எதிர்காலத்தையும் பெரும்புகழையும் தேடித் தருவார் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

வணிக வைசிய நற்குடும்பத்தில் 1920 நவம்பர் 7இல் தோன்றிய திரு. சைதாப்பேட்டை வேணுகோபால் சிட்டிபாபு அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் படித்து வரலாற்றுத் துறையில் எம்.ஏ., பட்டமும் பெற்றார். பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் தேறி நார்விக் பரிசும், ஐராவதம் பரிசும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வழி பெற்றார். பின் பி.டி., பட்டமும் அவருக்குக் கிடைத்தது.

1942இல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி வரலாற்றுத் துறையில் விரிவுரையாளராகப் பணியேற்றார். நான்கு ஆண்டு கட்குப் பின் அதனை விட்டுவிட்டுச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி அறிஞராகச் சேர்ந்தார்.

சென்னைக் கல்வித் துறையில் 1947இல் சேர்ந்தார். 1955இல் வேலூரிலுள்ள அரசினர் பயிற்சிக் கல்லூரியின் முதல்வரானார். அதன் பின் 1960இல் பள்ளிக் கோட்ட ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்றார். 1962இல் துணைக் கல்லூரி இயக்குநர் பதவி அவருக்குக் கிடைத்தது. மூன்றாண்டு கட்குப் பின் இணைக் கல்வி இயக்குநரானார். அதன் பின் 1970இல் அவர் பள்ளிக் கல்வி இயக்குநரானார். கல்லூரிக் கல்வி இயக்குநராகும் பேறு 1974இல் அவருக்குக் கிட்டியது. ஓராண்டிற்குள் அவர் துணைவேந்தர் பொறுப்பை யடைந்து விட்டது அவருடைய ஆட்சித் திறனுக்கு அரசு காட்டும் ஆதரவே காரணமாகும்.

அமெரிக்கக் கல்வி முறையை ஆய்வதற்காக 1966-67இல் அவர் அமெரிக்காவிற்குச் சென்று வந்தார். ஆறு மாதங்கள் அமெரிக்காவில் தங்கியபின் இரண்டு மாதங்கள் சுவீடன், நார்வே, டென்மார்க், நெதர்லாண்ட்ஸ் முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் தாயகம் திரும்பினுர். மீண்டும் 1970இல் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுடன் அமெரிக்கா, மேற்கு செர்மனி, இங்கிலாந்து, சப்பான் மற்றும் தூரக்கிழக்கு நாடுகட்கும் அவர் சென்று வந்தார்.

தமிழ்நாடு பாரத் சாரணர் இயக்கத்தின் மாநிலத் தலைமை ஆணையராகத் தற்போதுள்ளார். கல்வி தொடர்பான பல குழுக்களிலும் அமைப்புகளிலும் அவர் இடம்பெற்றுச் சிறந்த பணியாற்றி வருகின்ருர். சென்னை, அண்ணுமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழுக்களில் உறுப்பினராக உள்ளார். தமிழக, நடுவண் அரசுகளின் திட்டக் குழுக்களிலும் கல்விப் பிரிவில் உறுப்பினராக இடம் பெற்றுச் சிறந்த செயல் திட்டங்களை உருவாக்கத் துணைபுரிந்துள்ளார்.

இத்தகைய பேரறிவும் ஆற்றலும், பண்பு நலமும் படைத்த புதிய மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் நீடூழி வாழ்ந்து மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற்றுச் சிறக்க வாழ்வாராக.

உயர்திரு சை. வே. சிட்டிபாபு அவர்களிடத்தில் பள்ளிக் கல்வித் துணை இயக்குநராக விருந்த திருவாளர் கே. மோகன ரங்கம் அவர்கள் கல்லூரிக் கல்வி இயக்குநராக அமர்த்தப் பெற்றிருப்பது மிக்க மகிழ்ச்சி தருவதாகும். இருவரும் அவரவர் களிடத்தில் புகழ் பெருகப் பணியாற்றுவார்களாக!

1—3—75ல் மதுரைப் பல்கலைக் கழக ஆடவர் விடுதியில் நடைபெற்ற விடுதிவிழாவில் சிறப்பு விருந்தினராக வந்து சிறப்பித்த துணைவேந்தர் திரு. சை. வே. சிட்டிபாபு அவர்களுக்குப் படித்தளித்த வரவேற்புக் கவிதை

இணையில்லாத் துணைவேந்தே ஈடில்லாத் தந்தையே
அணைகடந்த வெள்ளம்போல் ஆடவரின் உள்ளமெலாம்
ஒளிகண்ட பூப்போல உளமகிழ்ந்த பூரிப்புடன்
களிகொண்டு அழைக்குதய்ய கரங்கூப்பி வணங்குதய்ய. 1

எம்விடுதி வரலாற்றில் எழுதிட்ட பெருஏட்டில்
இம்முறையே முதல்தடவை இன்றுநீங்கள் நடத்துவிழா
எம்முடைய அழைப்பிற்கு எம்மறுப்பும் சொல்லாமல்
அன்புடனே வந்துள்ளீர் ஆயிரமே வாழ்த்துக்கள். 2

இலங்குகின்ற மீனிடையே இயங்குகின்ற மதிபோலே
வலக்கரமும் இடக்கரமும் வாழ்த்துரைக்க வந்தருளி
கலந்திடுவீர் விருந்தினிலே கலந்திடுவீர் உளத்தினிலே
நலம்பெறவே எங்களுக்கு நல்லுரையே தந்தருள்வீர். 3

நாவேந்தர் சீராட்டும் நன்மதுரைக் கழகத்துக்குப்
பாவேந்தர் பாராட்டும் பச்சையப்பன் கல்லூரி
துணைவேந்த ராகிடவே தொடர்ச்சியாக மூவறிஞரை
மூவேந்தாய் தந்ததிலே மூன்ருவது பாண்டியரே. 4

பல்கலைக்க ழகமென்னும் பருவுடம்பின் நுண்ணுன்மா
எல்லையில் அறிவொளியால் ஏந்துபுகழ் கொண்டவரே
கல்லூரி இயக்கிவிட்டுக் கழகத்தை இயக்குபவரே
கல்விக்க டல்தன்னிலே கரைகாணத் துடிப்பவரே. 5

தேனருவித் தமிழ்ப்பேச்சில் தென்றலின்சு கமிருக்கும்
கானருவி உரையினிலே கற்கண்டுச் சுவையிருக்கும்
ஆங்கிலமும் நும்நாவின் அடியமர்ந்து சொல்விரிக்கும்
ஓங்குபுகழ் பார்பரவ ஒளிவீசும் துணைவேந்தே. 6

படிப்படியாய் முன்னேறிப் படிப்பினிலே சுவையூறி
அடிக்கடிமேல் நாட்டில்நும் அருங்கல்வித் திறன்கூறி
துடிப்புடனே செயலாற்றும் தூமனநல் துணைவேந்தே
பிடித்தமுடன் நல்குகின்ருேம் பெற்றிடுவீர் வரவேற்பு. 7

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமனம் ஆகியுள்ள திரு. சை. வே. சிட்டிபாபு M.A., B.T. அவர்களுக்கு வாழ்த்துப்பா!

[வித்துவான் நெல்லை ஆ. கணபதி பி. ஏ.]

கல்வியை நாடும் மாணவர் போற்றும்
கனிவுடை ஆசிரி யருமாய்க்
கடமையை ஆற்றும் பேரா சிரியர்
தாந்துணை வேந்தராய் மதுரைப்
பல்கலைக் கழகப் பொறுப்பினை ஏற்கும்
பாங்கினைத் தொடர்ந்துஇப் போது
பல்துறை நிபுணர் சை.வே. சிட்டி
பாபுவும் பணியினை ஏற்ருர்!

நல்லவர்! கல்வித் துறையினைப் பேணி
நாள்தொறும் வளர்த்திடும் மேதை!
நாவுதான் இனிக்கப் பேசிடும் மன்னர்
நற்றமிழ் தோய்ந்தவிற் பன்னர்!
வல்லவர்! அன்பர் மறைந்தநம் டாக்டர்
வரதரா சனுரவர் போல
வையகம் போற்றத் திருப்பணி செய்தே
வாழிய! வாழிய! இனிதே!

செய்திகளும் குறிப்புகளும்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை ஆசிரியர் ஒன்பதாவது கருத்தரங்கு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சார்பில் ஆசிரியர் ஒன்பதாவது கருத்தரங்கு பிப்ரவரித் திங்கள் 8, 9 ஆகிய இரு நாள்களிலும் அண்ணாமலை நகரில் சிறப்புற நடைபெற்றது. மணிமேகலையில் பலபொருள் பற்றித் தமிழ்த்துறையாசிரியர் பதினெழுவர் ஆய்வுக் கட்டுரை படித்தனர். தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தம் வரவேற்புரையில், மாணவர்களிடையே ஆராய்ச்சித் திறனைப் பெருக்குவதே இக்கருத்தரங்கின் நோக்கம் என்றும் கருத்தரங்குக் கட்டுரைகள் அச்சுருப் பெற்றால் ஏனைய அறிஞர்கட்கும் பயன்படும் எனவும் கூறினர்.

துணைவேந்தர் சா. ப. ஆதிநாராயணர் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தார். கருத்தரங்கின் முதற்பகுதி 8-2-75இல் பேராசிரியர் வெள்ளைவாரணனர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. டாக்டர் மு. கோவிந்தசாமி மணிமேகலையின் காலம் என்னும் கட்டுரையினைப் படித்தார். மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் நகர் அமைப்புகள் என்னும் பொருள் பற்றியும், திரு. அ. ஞானப்பிரகாசம் மணிமேகலைப் பாத்திரப் பெயர்கள் என்னும் பொருள் பற்றியும், திரு. சி. வேங்கடபதி 'அரசியல் அறம்' என்னும் பொருள் பற்றியும், திரு. கோ. இலக்குமண சாமி 'மணிமேகலையில் சிலம்புச் செய்திகள்' என்னும் பொருள்பற்றியும் ஆய்வுரைகள் வழங்கினர்.

9-2-75இல் திரு. கொ. இலக்குமணசாமி அவர்கள் தலைமையில், திரு. வெ. பழனியப்பன் முற்பிறப்புக் கூறுகள் என்னும் பொருள் பற்றியும், திரு. க. வெள்ளை வாரணனர் 'மணிமேகலையிற் சைவம்' என்னும் பொருள் பற்றியும், டாக்டர் சோ. கந்தசாமி 'சாங்கியம்' என்ற தலைப்பிலும், திரு. துரை பட்டாபிராமன் 'மணிமேகலையில் வரும் தெய்வங்கள்' பற்றியும் ஆய்வுரை வழங்கினர்.

அடுத்துக் கருத்தரங்கின் மூன்றும் பகுதி டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் 'உவமைகள். என்னும் தலைப்பில் திரு. சு. சாமிஐயா அவர்களும், 'சித்திராபதி' என்னும் தலைப்பில் திரு. சா. மு. பாலசுப்பிரமணியன் அவர்களும், மணிமேகலையில் இயற்கையிறந்த செய்திகள் என்னும் தலைப்பில் திரு. ஆ. இராமசாமிப் பிள்ளையவர்களும், 'மணிமேகலையில் யாப்பமைதி' என்னும் தலைப்பில் திரு. ந. வி. செயராமன் அவர்களும், 'மணிமேகலையின் கதை வடிவங்கள்' என்னும் தலைப்பில் திரு. இரா. இராமலிங்கம் அவர்களும் ஆய்வுரை வழங்கினர். முன்னாள் ஆசிரியர் திரு. வி. மு. சோமசுந்தரம்பிள்ளை உவமை, மணிபல்லவம், மணிமேகலை முதலிய சொற்களின் சொற் பிறப்பியலை ஆராய்ந்து காட்டினர். திரு. சிவ. திருநாவுக்கரசு நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

நடுவண் அரசின் இந்தித் திணிப்பு முயற்சி!

ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்று மக்களவையில் பதிவு செய்யப் பெறும் அரசு அறிக்கைகளில் நடுவண் அரசின் துறைப் பெயர்கள் ஆங்கிலத்தில்தான் குறிப்பிடப்படும், இந்திப் பெயர்கள் இடம் பெரு என்று 1971இல் நடுவண் அரசு ஓர் உறுதிமொழி அளித்திருந்தது. அந்த உறுதிமொழியை மீறி இப்போது நாடாளுமன்றத்தில் பதிவு செய்யப்பெறும் அறிக்கைகளில் இந்தி புகுத்தப்பட்டது. இதனைக்

கண்ணுற்ற தமிழக உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்கள் அரசுக்கு நீண்டதொரு கடிதம் எழுதி, அரசின் உறுதிமொழி கைவிடப்பட்டதைச் சுட்டிக்காட்டினர். அதன் விளைவாக மீண்டும் அப் பெயர்களை ஆங்கிலத்திலேயே வெளியிட அரசினர் ஒப்புதல் அளித்துள்ளனர்.

சிவ வழிபாடும் சிவ தீக்கை வழங்குதலும்

நெல்லை மாவட்ட தெய்விகப் பேரவையினர் திருச்செந்தூர் கோவிந்தம்மாள் ஆதித்தனர் திருமண மண்டபத்தில் 30—3—75 இல் காலை 8 மணிக்குச் சைவப் பெருமக்களுக்குச் சிவ தீக்கை, சிவ வழிபாடு ஆகியன வழங்குகிறார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழகத் திருமடங்களின் தலைவர்கள், தவத்திரு குன்றக்குடியடிகளார், சுந்தர அடிகள், சாந்தலிங்க இராமசாமி அடிகள், முருகதாச அடிகள், ஞானப்பிரகாச அடிகள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர் என்றும் தீக்கை பெற விரும்புவோர்,

"தலைவர், நெல்லை மாவட்டத் தெய்விகப் பேரவை,
வ. உ. சி. தெரு, திருநெல்வேலி-6"

என்ற முகவரிக்கு எழுதுமாறும் நெல்லை மாவட்டத் தெய்விகப் பேரவைத் தலைவர் திரு. மு. சு. சங்கர் அறிவிக்கிறார்.

சங்கீத நாடகக் கலைக்கழகப் பரிசு (1974)

இவ்வாண்டில் பரிசுபெற்ற பன்னிருவரில் இசைப் பேரரசி எம். எஸ். சுப்புலட்சுமி, எம். டி. இராமநாதன், டி. என். கிருட்டிணன், தஞ்சை கே. பி. கிட்டப்பா, சென்னை எஸ். டி. சுந்தரம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். பரிசு புதுதில்லியில் குடியரசுத் தலைவர் அவர்களால் 7—3—75 இல் வழங்கப் பெற்றது. அவ்வமயம் இசைப் பேரரசி எம். எஸ். சுப்புலட்சுமி இன்னிசை விருந்தளித்தனர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையக் கருத்தரங்கு

சென்னை, பிப். 16—தமிழ் ஆராய்ச்சியில் விஞ்ஞானக் கண்ணோட்டம் வேண்டும். அப்போதுதான் தமிழ் வளர்ச்சியடையும். அதன் சிறப்பையும் உலகம் உணரும் என்று தமிழ்நாடு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் வலியுறுத்தினர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் ஏற்பாடு செய்திருந்த 'ஆராய்ச்சி முறை' பற்றிய கருத்தரங்கை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தமிழுடன் ஒப்பிட்டால் மேற்கு நாட்டு மொழிகள் இளையவை. அவ்வளவு வளமான இலக்கியங்களும் அவற்றிடம் இல்லை. ஆனலும் முன்னேற்றமடைந்த முறைகளின் மூலம் அவை ஆராய்ச்சியிலும் முன்னேற்றம் அடைந்துள்ளன. ஆகவே, தொன்மையானதும் இலக்கிய வளம் உடையதுமான தமிழ்மொழியானது நவீன விஞ்ஞான முறையைக் கடைப்பிடித்தால் ஆராய்ச்சியில் மிகுந்த முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு நவீன முறைகளைக் கடைப்பிடிப்பதில் துன்பமும் இராது, ஏனெனில் ஆங்கிலத்தையோ மற்ற வெளிநாட்டு மொழிகளையோவிட தமிழ் எளிதானது, என்றும் அவர் கூறினர்.

ஐதராபாத்து ஆங்கிலம், மற்ற வெளி நாட்டு மொழிகள் மத்திய ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ரமேசு மோகன் தலைமை தாங்கினர்.

"இந்தத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் இந்தியாவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்குமே ஓர் ஆராய்ச்சி நிலையமாக இயங்கலாம். இந் நிலையத்தில் உள்ள வசதிகளை எல்லாப் பல்கலைக் கழகங்களும் பயன்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும்" என்று அவர் சொன்னர்.

நிலையத்தின் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் கூட்டத்தினரை வரவேற்றார்.

மழை வேண்டி முஸ்லிம்கள் தொழுகை

மழை பெய்ய வேண்டும் என்று முஸ்லிம்கள் பிரார்த்தனையும் தொழுகையும் நடத்தினர். சென்னை மெரீனு கடற்கரையில் 16—2—75 காலை 10 மணி முதல் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற தொழுகையிலும், பிரார்த்தனையிலும் பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

முதலில் தொழுகை நடைபெற்றது. பாவமும், குற்றமும் செய்திருந்தாலும் அதற்காக இத்தனை இன்னல்கள் கொடுத்தது போதும்; மன்னித்துக் கருணை செய்ய வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொண்டு பிரார்த்தனை செய்தனர்.

மதிப்புரை

நாட்டுப்புற இயல்—ஓர் அறிமுகம்

[ஆசிரியர் : சு. சண்முகசுந்தரம், எம்.ஏ. விற்பனை உரிமை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரகாசம் சாலை, சென்னை-1. விலை : ரூ. 7-00]

எட்டு வடிவில் வராமல் நாட்டுப்புற மக்களின் நாவிலே நடமாடிய—நடமாடுகின்ற கவிதைகள் பல உண்டு. அவை கேட்பதற்கு இனிமை பயப்பதோடன்றி நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் உணர்த்துவன. அவற்றுள் வரலாற்று உண்மைகளும் பொதிந்து கிடக்கும். அத்தகைய நாட்டுப்புற இயல் இக்காலத்து அறிஞர்களால் சிறந்த இலக்கியமாகப் போற்றப்பட்டு அவைபற்றிய திறனாய்வுகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. "நாட்டுப்புற இயல்—ஓர் அறிமுகம்" என்னும் இந்நூல் அத்தகைய திறனாய்வு நூல்களுள் ஒன்று. நாட்டுப்புற இயலை அறிய விழைவோர்க்கு இந்நூல் நல்லதொரு வழிகாட்டியாகும். டாக்டர் சஞ்சீவி, க. ப. அறவாணன் ஆகிய அறிஞர்களின் அணிந்துரையுடன் வெளிவந்துள்ளது.

பெரியபுராண ஆய்வுரை—இரண்டாந் தொகுதி—அப்பர்

[ஆசிரியர்: வித்துவான் மறை திருநாவுக்கரசு. கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1/140, பிரகாசம் சாலை, சென்னை-1. விலை: ரூ. 10-00]

பெரியபுராண ஆய்வுரை தோட்டனைத்தூறும் அறிவுக் கேணியாகும். இவ்விரண்டாந் தொகுதியில் அப்பர் பற்றிய ஆராய்ச்சியினை மிகத் திறம்படச் செய்துள்ளார் இந்நூலாசிரியர். பெரியபுராணக் கதையினைப் பயில்வார்க்கு இயல்பாகத் தோன்றும் ஐயந் திரிபுகளைத் தடை விடைகளால் நீக்கித் தாம் கண்ட மெய்ம்மையினை நிலைநாட்டுகிருர். சுருங்கச் சொல்லவேண்டுமானுல் ஆராய்ச்சித் துறையில் ஈடுபாடு கொண்டோர்க்கெல்லாம் இந்நூல் நல்லதொரு வழிகாட்டியாகவும் சுவையும் பயனும் உடையதாகவும் அமைந்துள்ளது. அன்பர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக
சென்னை-600001, 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

செந்தமிழ்ச் செல்வி பற்றிய உரிமை விளக்கம்-1956 ஆம் ஆண்டுச் சட்டம் - விதி 8 - படிவம் 4 இல் கண்டுள்ளபடி

---

1. வெளியிடும் இடம் : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1.

2. வெளியீட்டு முறை : திங்களிதழ்

3. அச்சிடுவோர் பெயர் : அப்பர் அச்சகம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 2/140, பிரகாசம்சாலை, சென்னை-1.

4. வெளியீட்டாளர் பெயர் : திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட்.
   இனம் : இந்தியர்
   முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1

5. ஆசிரியர் பெயர் : திரு. வ. சுப்பையா பிள்ளை
   இனம் : இந்தியர்
   முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1

6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும் :

1. திரு T. S. இராமலிங்கம் பிள்ளை, M. A., B. L.
   ஓய்வு பெற்ற சட்டத்துறைச் செயலாளர்,
   7, லேடி தேசிகாச்சேரி சாலை, ஆழ்வார்பேட்டை,
   மைலாப்பூர், சென்னை-4.

2. திரு வ. சுப்பையா பிள்ளை
   6, பவழக்காரத் தெரு, சென்னை-1.

3. திருமதி சு. மங்கையர்க்கரசி
   6, பவழக்காரத் தெரு, சென்னை-1.

4. திரு R. M. S. கோபாலகிருஷ்ண பிள்ளை
   வணிகர், சாத்தான்குளம்,
   (திருநெல்வேலி மாவட்டம்)

5. திரு M. K. சிவகாமிநாத பிள்ளை
   நான்காவது மாடி, புரோச் கட்டிடம்,
   பிரின்செஸ் தெரு, பம்பாய்-2.

6. திரு N. S. சுந்தரம், பார்-அட்-லா,
   134, தெற்கு இராச வீதி, தூத்துக்குடி.

7 திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
   வங்கியார், பாகனேரி, (இராமநாதபுரம் மாவட்டம்)

8. திருமதி கா. லட்சுமி ஆச்சி
   (திரு. காசிவிசுவநாதன் செட்டியார் மனைவி)
   பாகனேரி.

9. திரு. பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார்
உரிமையாளர், பாரி அச்சகம், 127, பிரகாசம் சாலை, சென்னை.

10. டாக்டர் அழகப்ப செட்டியார்
கல்வித்துறை அறக்கட்டளை,
காரைக்குடி, (இராமநாதபுரம் மாவட்டம்.)

11. திருமதி க. வடிவழகி
(திரு. இரா. கலியாணசுந்தரம் மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

12. திருமதி மு. வயிரமணி
(திரு இரா. முத்துக்குமாரசாமி மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

13. திருமதி பழ. மீனாட்சி ஆச்சி
(திரு. S. M. பழனியப்ப செட்டியார் மனைவி)
11, ரட்லண்ட் கேட், 2-வது தெரு,
சென்னை-6.

14. திரு S. Ct. சிதம்பரம் செட்டியார்
162, அவினாசிசாலை, கோயமுத்தூர்-1.

15. திரு. A. Kn. அருணாசலம்
(திரு.கண்ணப்பசெட்டியார்புதல்வர்) நாயனார் குளத்தெரு,
நாட்டரசன் கோட்டை, (இராமநாதபுரம் மாவட்டம்)

16. திரு T. S. ஜம்புலிங்கம் செட்டியார்
திருப்பூர் இல்லம், கோயமுத்தூர்.

17. திரு Rm. K. Rm. இராமசாமி செட்டியார், வங்கியார்.
திட்டை, (தஞ்சை மாவட்டம்)

18. திரு. இரா. கலியாணசுந்தரம், பி.எஸ்.ஸி.
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

19. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி லிப்.
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் எனது முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என வ. சுப்பையா பிள்ளையாகிய யான் உறுதியளிக்கிறேன்.

10—3—1975 (ஒப்பம்) வ. சுப்பையாபிள்ளை
பதிப்பாளர்

கழகப் புதிய வெளியீடுகள்

மழையே வா!

மழை வளம் குன்றி நாடு நலிவுற்றிருக்கும் நிலையினை மாற்றி, மக்கட்கு வளமும் வாழ்வும் அளிக்கத் திருமுறைகளிலிருந்து அருட் பாடல்கள் பலவற்றைத் தொகுத்து ஓதுவார்களைக் கொண்டு அவற்றைப் பாடச் செய்தும் அழகிய—பயனுள்ள வெளியீடாகவும் வெளியிடப் பட்டுள்ளது 'மழையே வா!' என்னும் இச்சிறிய ஆனல் அரிய வெளியீடு. சைவ மெய்யன்பர்கள் இல்லந்தோறும், நூல் நிலையங்கள் தோறும் இருக்க வேண்டிய அருள் நூல்.

விலை ரூ. 1 25

வாணிபத்தின் கதை

பேராசிரியர் மா.பா.குருசாமி,எம்.ஏ., டி.ஜி.டி முன்னர்ப் பணத்தின் கதை, பாங்கின் கதை ஆகிய அரிய பொருளாதாரக் கதை நூல்களை அனைவரும் படித்தின்புறும் வகையில் எழுதிய பேராசிரியர் அவர்களே இக் கதையினையும் எழுதியுள்ளார். வாணிபத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றிச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது இந்நூல். விலை ரூ. 1 75

நம்மைச்சுற்றி நாற்பது உயிர்கள் - பகுதி 1

பேராசிரியர் : மா. பா. குருசாமி, எம்.ஏ., டி.ஜி.டி.

ஊர்வன, நடப்பன, பறப்பன, நிலத்தில் வாழ்வன நீரில் வாழ்வன, நிலத்திலும் நீரிலும் வாழ்வன, நச்சுயிரிகள் நஞ்சிலலா உயிரிகள் எனப் பலவகையான உயிர்கள் நம்மைச் சுற்றி வாழ்கின்றன. எனினும் அவற்றைப் பற்றி நாம் சரியாக அறிந்து கொள்வதில்லை. அற்ப உயிர்கள் என நம்மால் கருதப்படுகின்ற பல உயிரினங்களின் வாழ்க்கையில் பல உண்மைகள் அடங்கியுள்ளன என்பதை நம்மைச் சுற்றி நாற்பது உயிர்கள் என்னும் இச் சிறு நூல் மூலம் அறிந்து கொள்ளலாம். நூலின் முதற்பகுதியாகிய இதில் 20 உயிர்கள் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. படங்களுடன்கூடிய அழகிய பதிப்பு விலை ரூ. 3 50

இளைஞர்க்கான கம்பராமாயணக் கதை

ஆசிரியர் : புலவர் சொ. முருகேச முதலியார்

கம்ப ராமாயணம் தமிழில் சுவைமிக்கதோர் இலக்கியம். இதனை எல்லாரும் படித்து மகிழும் வண்ணமும், மூலச்சுவை குன்றாத வகையிலும் சுருக்கிஎழுதப்பட்டதே இளைஞர்க்கான கம்பராமாயணக் கதை விலை. ரூ. 5 00

பதிவு எண் : M. 4899

அப்பர் அச்சகம், சென்னை-600 001